# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி தமிழ்மாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

உள்நாடு சந்தா ரூ. 2.      வெளி நாடு சந்தா ரூ. 3.

புத்தகம் 1 | குரோதனஹு ஐப்பிசிமீ | பகுதி 5

விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| சுதேச மருந்துகள்:— | பத்திராதிபர் | ... 1 |
| வைத்திய உலகம் :— | ஸ்ரீ பார்த்தஸக ஆய்யங்கார் | ... 6 |
| மதிப்புரை :— | | ... 9 |
| திரிதோஷம் :— | ஹரிரஞ்சன் மஜூம்தார் அவர்கள் M. A. | 9 |
| வடமொழி சித்தவைத்தியம் :— | பத்திராதிபர் | ... 10 |
| மதிப்புரை :— | | 18 |
| வைத்திய சாரம் :— | பண்டிட் நாராயண ஐயங்கார் | ... 54 |


Pandit, S. NARAYANA IYENGAR,

**Editor and Publisher.**

விலாசம் :— வைத்தியசந்திரிகா, கரூர்.

**Vol. 1 | October 1925 | No. 5**

he " Vivekabanu Press, " Karur.

## அபத்த மருந்துகள்.

டாக்டர் கூனி என்பவர் ஜர்மனி தேசத்தில் பிறந்த ஓர் வைத்திய நிபுணர். மனிதனுக்கு உண்டாகும் வியாதிகளில் மருந்துகளை உபயோகிக்கக் கூடாதென்றும் இயற்கையில் தானாகவே சௌக்கியமாகும்படி செய்யவேண்டுமென்றும் அவர் மதம். அன்னார் கூறுவதாவது.— சரீரத்தில் இயற்கைக்கு ஒவ்வாததும் வியாதிக்கு உரியதுமான சில அம்சங்கள் சேர்ந்து வியாதி உண்டாகின்றது. அக்காலத்தில் வியாதியைத் தணிக்க மருந்து கொடுப்பதால் அம்மருந்துகள் சரீரத்தில் பாவி வியாதிக்கு உரிய வஸ்துக்கள் சரீரத்திலிருந்து வெளியேற வொட்டாமல் தடுத்து வெளிப்பார்வைக்கு வியாதி நிவர்த்தியானதுபோல தோன்றச் செய்கின்றன. தவிர வியாதிக்குரிய அம்சங்கள் எவ்விதம் சரீர இயற்கைக்கு ஏற்றவைகளல்லவோ அதுபோலவே இம்மருந்துகளும் இயற்கைக்கு விரோதமானவைகள். உதாரணமாக கொயினவை எடுத்துக் கொள்வோம். அதை உபயோகித்தவுடன் காய்ச்சல் வெளித்தோற்றத்திற்கு தணிந்தது போல தென்படுகின்றது. ஆனால் அது காய்ச்சலை உள்ளே அடக்கிவைப்பதாக அனுபவத்தில் தெரிகின்றது. சிலசமயங்களில் கொயினவை உபயோகித்து காய்ச்சல் தணிந்து மருந்தை நிறுத்திவிட்ட பிறகு சில நாட்களுள் காய்ச்சல் திரும்பவும் வருவதை எல்லாரும் பார்க்கலாம். அதற்கு காரணம் மருந்து உபயோகித்தவரையில் காய்ச்சல் வெளிப்பார்வைக்கு அடங்குகின்றதேயன்றி காய்ச்சலுக்குரிய தோஷம் நிச்சேஷமாக சரீரத்தை விட்டகலாததுதான். சில சமயங்களில் அப்படி அடங்கின காய்ச்சல் அதேமாதிரி திரும்பி வராவிட்டாலும் வேறுவிதமாக வெளிக்கிளம்புகின்றது. அதாவது:— அக்னிமந்தம், வயற்றுவலி, பசியின்மை, இது போன்ற வியாதிகள் தோன்றுகின்றன. காய்ச்சலுக்குரிய காரணம் நிச்சேஷமாக சரீரத்தை விட்டு வெளியேறாததாலும் பூராவாக வெளியேற்ற மருந்துகளுக்கு சக்தியில்லாததாலும் அவை பூரணமாக சரீரத்தை விட்டு கழிந்தாலல்லது பூரண ஆரோக்கியமுண்டாகாததலாலும் இதுபோன்றமருந்துகளால் யாதொரு பிரயோஜனமும் உண்டாவதில்லை. ஆகாயத்தில் நீராவிமுதலிய பரவியிருந்தாலும் சில காரணங்களால் அது ஒன்று சேர்ந்து மழைபெய்வதும்

ரத்த சர்ம வியாதிகளுக்கும் உடபடுகின்றது. ஆகையால் அவ்வித மருந்துகளையும் ஒரு சத்துருவாக பாவிக்கவேண்டும். வியாதியடைந்தபோது உள் அவயவங்கள் பீடிக்கப்பட்டு அவைகளின் தொழிலும் மந்தப்படுகின்றது. அக்காலத்தில் (stimulant) உத்ஸாஹகாரிகளான மருந்துகளைகொடுத்து அவைகளின் தொழில் அதிகப்படுத்தப்படுகின்றது. இதுவும் மிகவும் அனுசிதம். ஒரு அவயவம் சக்தியின்றி துர்பலமானநிலையில் இருக்கும்பொழுது அதற்கு உத்ஸாஹகாரிகளான மருந்துகளால் தொழில் அதிகமானுலும் அது நிலைத்திராது. சுவல்பகாலத்தில் அதற்கு வேகம் தளர்ந்து முன்னிலும் அதிகம் சீர்கெடும். ஒரு துர்பலமான குதிரையை சவுக்கு முதலிய சாதனங்களால் மிக விரைவாக ஓடும்படி செய்தால் சுவல்ப நிமிஷங்களில் வேகம் தளர்ந்துபோவதுடன் சக்திக்கு மீறி ஓட்டியதால் மிகுந்த துர்ப்பலம் அடைவதுடன் கடைசியாக பிராணஹானிகூட நேருவது சகஜம். அதுபோலவே அவயவங்களும். liver என்ற கிரஹணியின் துர்பலத்தால் அக்னி மந்தம் அல்லது அஜீர்ணம் நேருகின்றது. அக்காலத்தில் அந்த கிரஹணிக்கு உத்ஸாக காரிகளான சிலமருந்துகளால் சிலகாலம் அதன்தொழில் சரிவர நடந்தாலும் சுவல்பகாலத்தில் எவ்வளவு உத்ஸாககாரிகளான மருந்துகளாலும் பலம்பெருமல் முன்னிலும் அதிக தளர்ச்சியடைந்து மரணங்கூட நேரிடும். ஆகையால் மருந்துகளால் குணம் உண்டாகிறதென்பது வெறும் மாயை. உண்மையில் பலவித சங்கடங்களே நேரிடுகின்றன. இவ்விதம் டாக்டர் கூனி அவர்கள் கூறுவது ஆங்கில மருந்துகளைபற்றியா, அல்லது உலகத்திலுள்ள எல்லா மருந்துகளைப்பற்றியா! அப்பொழுது நமது சுதேசமருந்துகளும் இந்ததோஷத்திற்கு உட்பட்டவைகளாகுமேயென இவ்விதம் சந்தேகம் வருவதும் இயல்பே. டாக்டர் அவர்கள் கூறுவது அவர் அனுபவத்தில்கண்டறிந்த உண்மையே. போன சந்திரிகையில் நாம் வெளியிட்டுள்ள சில ஆங்கிலவைத்திய நிபுணர்களுடைய அபிப்பிராயமும் இதை ஒட்டியேயிருக்கின்றது. தற்காலமிருக்கும் ஆங்கில சிகித்ஸா முறைகளிலும் இவ்விஷயத்தை கவனிக்கலாம். ஆனால் சுதேச மருந்துகள் இவ்வித தோஷங்களுக்கு கொஞ்சமும் இலக்காகவில்லை.

சுதேசமுறைகளில் எல்லா வியாதிகளுக்கும் மருந்து இருவகையாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. வியாதி பிரத்யனீகம் அல்லது வியாதிக்குரிய மருந்து என்றும் தோஷப் பிரத்தியனீகம் அல்லது வியாதிகளுக்கு காரணமான தோஷங்களுக்குரிய மருந்து

என்றும் இருவகையுள்ளது. இதில் வியாதிக்குரிய மருந்தாவது:— வியாதிகளுக்கு காரணம் என்ன. அவ்வியாதிகளால் எவ்விதம் சரீர நிலைமை (system) பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை ஒன்றும் கவனியாமல் அடையாளங்களால் (symptom) வியாதியை மாத்திரம் உணர்ந்து உடனே அதை பலாத்காரமாக அடக்கிவிடும் மருந்து முற்கூறியதாகும். அவ்விதமின்றி சரீரநிலைமை பாதிக்கப்பட்டதை நன்குணர்ந்து விஷமித்த அந்நிலைமையை இயற்கைக்கு கொண்டுவருவது பிற்கூறிய தோஷங்களுக்குரிய மருந்து எனச் சொல்லப்படும். சரீரத்தில் வாத பித்த சிலேஷ்மம் என்கிற திரிதோஷ நிலைமை விஷமித்தே வியாதி உண்டாவதால் விஷமித்த திரிதோஷ நிலைக்கே வியாதியெனச் சொல்லப்படுவதால் அவ்விஷம நிலைமையை ஒழுங்குசெய்து இயற்கை நிலைமைக்கு கொண்டுவருவதெனப் பொருள் இவ்விரண்டு வகைக்குள் முந்திசொல்லியவகையை அனுசரித்தது ஆங்கிலமுறை. வியாதியின் சுபாவத்திற்கு நேர் விருத்தமான முறைகளால் அதை அடக்குவது என்பது ஆங்கில வைத்தியகொள்கை. Aspirine (ஆஸ்பிரைன்) Phenacetin (பெனசிடின்) போன்ற மருந்துகள் வியாதியைபலாத்காரமாக அடக்குவதால் சில நன்மைகளும் தீமைகளும் கலந்தே உதிக்கின்றன. சில சமயங்களில் இம்மருந்துகள் ஹிருதயத்தின் வேலையையே ஒடுங்கச்செய்து மரணத்தைகூட விளைவிக்கலாம். ஆனால் சுதேசமுறைகளில் வியாதி பிரத்யநீகம் என்ற மருந்துவகை ஆங்கிலத்தில் போலகெடுதலை விளைவிப்பதில்லை. வியாதிக்கு மாறான குணமுள்ள மருந்துகளால் வியாதியை பலாத்காரமாக தணிப்பது என்ற பொருளில் அப்பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. தவிர நிராதபக்ஷமாகவே இவ்வகை சுதேச வைத்திய நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இம்மருந்துகளும் "சோதனம்" என்றும் "சமனம்" என்றும் இருவகையாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சோதனமாவது — வியாதிகளை அறவே ஒழித்து சரீரமுள்ளவரை அவ்வியாதி அணுகாவண்ணம் செய்யும் மருந்தே.

"யேது ஸம்சோதனை: சுத்தா: நதேஷாம் புனருத்பவ:" என்று சோதன மருந்துகளால் நிவர்த்தியான வியாதிகள் மறுபடியும் அந்த சரீரத்திலேயே திரும்பி வருவதில்லையென முனிவர் கூறியுள்ளார்; இம்முறை சற்று கஷ்டமாகவிருப்பதாலும் அவற்றை அனுஷ்டிக்கும் வைத்தியனுக்கு தகுந்தசன்மானம் கிடைப்பது அரிதாகவிருப்பதாலுமே வைத்தியர்கள் அதிகமாக இவ்வழியை பின்பற்றுவதில்லை, பல வியாதிகளில் இவ்வழி யிருந்த நன்மையளித்திருப்பதை அனுபவத்திலும் அறிந்திருக்கிறோம். இம்முறை சுதேச வைத்தியர்களைத் தவிர மற்ற வைத்தியர்களுக்கு மிக அபூர்வமாகவே தோன்றும். சமனமருந்தாவது.—

"நசோதயதியத் தோஷான் சமான் நோதீரயத்யபி
ஸமீகரோதி விஷமான் சமனம் தச்ச ஸப்ததா"

வியாதிக்கு காரணங்களை அறவே அகற்றுமலும், வேறு புதியவியாதிகளை உண்டுபண்ணுமலும், விஷமித்த தாதுக்களை இயற்கை நிலையில் வைப்பதும் சமன மருந்து. ஆங்கில மருந்துகள் சற்றேறக்குறைய இம்முறையை அனுசரித்ததே. ஆனால் "ஸமான் நோதீரயத்யபி" என்று வியாதியால் சரீரத்தில் விஷமிக்காத பாகங்களை பாதிக்கக்கூடாது என்று சொன்ன லக்ஷணம் மாத்திரம் அவைகளுக்குப் பொருந்துவதில்லை. Phenacetin (பெனசிடின்) போன்ற மருந்துகள் வியாதியைத் தணித்தபோதிலும் ஹிருதய துர்பலம் போன்ற இதர ஹிம்சைகளை யுண்டாக்குவதால் சுதேச சமனமருந்துகளுடன் அதை சேர்க்க முடியவில்லை. இந்த ஒரு காரணம்பற்றியே அம்மருந்துகளை கையாண்ட பல ஆங்கில மேதாவிகள் அம்மருந்துகளின் பிறகு ஏற்படும் துர்க்குணங்களை கவனித்து அம்முறையை கண்டித்தனர். இந்த சமன மருந்துகளால் நிவர்த்தியாகும் வியாதி "தோஷா: கதாசித் குப்யந்தி" என்று கூறியதுபோல் பின்னால் ஒருசமயம் திரும்பவும் பீடிக்கக்கூடும். இம்மருந்துகளின் உபயோகத்தால் மற்றொரு புதிய வியாதிக்கு விதை போடப்படுவதில்லையென்பது கீழே சொன்ன வாக்யத்தால் நிச்சயமாக ஏற்படுகின்றது. ஆகையால் டாக்டர் கூனி அவர்கள் நினைப்பது போல சுதேச மருந்துகளால் புதிய தீங்கு ஒன்றும் சரீரத்திற்கு நேருவதில்லையென்பது உறுதி. மருந்துகளின் உபயோகத்தால் புதியதுர்க்குணம் உண்டாக கூடாதென்பதை ஆங்கிலர்கள் சமீபத்தில் தான் உணர ஆரம்பித்தார்கள். ஆனால் நமது பெரியோர்கள் வெகு காலத்திற்கு முன்னரே இத்துர்க்குணம் கூடாதென்றும் துர்க்குணத்தை கொடுக்கக்கூடிய மருந்துகளை விலக்கியும் சிலவற்றிற்கு துர்க்குணங்களை சிலஉபாயங்களால் விலக்கக்கூடிய சுத்திவழிகளையும் இயற்கையின் சக்தியை குறைக்காது வலுப்படுத்தக் கூடிய முறைகளையும் நன்கு உணர்ந்தவர் என்பது நமது நூல்களின் சுவல்ப அறிவாலும் விளங்குமென்பதை வற்புறுத்துகிறோம்.

# வைத்திய உலகம்.

( ஸ்ரீ பார்த்தசக அய்யங்கார் எழுதுகிறார். )

" RADIO - ELECTRO - GRAPHY "

சமீபத்தில் பூதபௌதிக சாஸ்திர நிபுணர் ஒருவர் ஒரு புதிய மின்சார சக்தியால் இயங்கும் அற்புதமான ஆயுதம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார். அதற்கு 'Radio-Electro-Graphy' என்று பெயர். இந்தக் கருவியின் உதவியால் ஹிருதயத்தின் உண்மையான நிலைமையைச் சரிவரக் கண்டறிதல் மிகவும் சுலபமாக இருக்கிறதாம்.

கருவியை மார்பில் வைத்துப் பிடித்துக்கொண்டிருந்தால் அது தானே ஹிருதயத்தில் இருக்கும் இரத்தாசயம், சுவாசப்பை முதலியவைகளின் நுட்ப பாகங்களுடைய சலனமாறுதல்களையும் இயற்கை வேற்றுமைகளையும் ஒரு இடத்தில் தெளிவாக குறிப்பிட்டுக்காட்டிவிடுமாம். இதுமட்டுமல்ல. இந்தக் கருவியின் உபயோகத்தால் வெகுதூரத்திலிருக்கும் ஒரு பேர்போன வைத்திய நிபுணரின் அபிப்பிராயங்களையும் யோஜனைகளையும்கேட்டு அவரை நேரில் பார்க்காமலே அவருடைய சிகிச்சையைப் பெறுவது சாத்தியமாகிறது. வியாதிஸ்தரின் மார்பில் வைக்கப்பட்டிருக்கும் இந்தக்கருவி பந்நூறுமைல் தூரங்களுக்கப்பாலுள்ள வைத்தியரின் வீட்டில் இந்த பிணியாளரின் ஹிருதயத்தின் உண்மை நிலையை சரிவரக்காட்டுமாம். ஆச்சர்யம்! நவீன ஆராய்ச்சியின் பயன்தான் என்ன? இதனால் வைத்திய உலகத்திற்கு பெரியநன்மைகள் உண்டென்றே சொல்லவேண்டும். ஆனால் எவ்வளவு பேர்கள் (ஏழைகள்) இந்தக் கருவியின் உதவிபெற்று உய்யமுடியுமென்பதை நினைக்குந்தோறும் இதன் பிரயோஜனத்தில் நமக்கு நம்பிக்கை குறைகிறது.

* * * * * *

பைத்திய நிவர்த்திக்கு ஓர் புதிய முறை :—

ஆங்கில நாட்டிலே பேர்போன மனவியாதிகளை நிவர்த்திக்கும் வைத்தியசாலைகளில் (Epsom) இப்சாம்ஆஸ்பத்திரியும்ஒன்று. அவ்விடத்தில் பைத்தியத்தை போக்கடிப்பதற்கு ஒருவித விநோதமான முறையை சிலமாத காலங்களாக அனுஷ்டித்து பயன்பெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் கையாளுவதென்ன?



பைத்தியத்தால் வருந்தும் வியாதியஸ்தர்களை ஒருவித கொசுக்களால் கடிக்கவிடுவதேயாகும். கொசுக்கள் கடிப்பதால் மலேரியல் ஜ்வரம் தீவிரமாக தன் தீய வேகத்துடன் தோன்றியவுடன் பைத்தியத்தின் சேஷ்டைகள் குறைந்து ஜுரத்தால் பிணியாளன் வருந்துகிறான். பிறகு மலேரியா சாதாரணமாக எப்பொழுதும் கையாளப்பட்டுவரும் முறையில் குணப்படுத்தப்படுகிறதாம். ஒரு வகை ஜ்வரத்திற்கு காரணபூதமான கிருமிக் கூட்டங்களால் சுத்தப்படுத்தப்படுகிற விஷவஸ்து பைத்திய நிவர்த்திக்குப் பயன்படுகிறதென்பது ஆச்சர்யமல்லவா?

மனிதன் தன் யோசனாசக்தியின் பயனால் பல்வித ஆராய்சிகளிலும் ஜயத்துடன் வெளியேறுகிறான். ஆனால் அவன் பூர்ண ஞானமும் வல்லமையும் உடையவனாதல் முடியாத காரியம். ஏனெனில் அந்த அதிகாரம் கடவுளுக்கே உரித்தானது. ஒரு வியாதியின் நிவர்த்திக்கு இன்னொரு நோயின் உதவி நமக்கு இன்றியமையாததா? தகுந்தவர்கள் விடை அளிக்கட்டும்.

* * * *

சென்னையில் தோத்து வியாதியின் கொடுமை :—

சென்ற வருஷத்திய அறிக்கையை சுகாதார நிபுணர் வெளியிட்டிருப்பதை பத்திரிகை படிப்பவர்கள் யாவரும் பார்த்திருப்பார்கள். அதை கவனித்து படித்தவர்கள் நமது தலைமை நகரில் தொத்து நோய்கள் செய்துவரும் அட்டகாசத்திற்கு அஞ்சியிருப்பார்கள். இறந்தவர்களில் நூற்றுக்கு நாற்பது பெயர் குழந்தைகளாம். விநோதம். 100-க்கு 18-பேர் தொத்துவியாதிகளின் கொடூரத்தால் மாண்டனராம். பிரதி வருஷம் அறிக்கைகளிலும் 'தொத்துவியாதி' 'தொத்துவியாதி' என்ற பிரலாபம் பேசப்படுகிறது. அதன் மூல காரணத்தையும் நிவர்த்தி முறையையும்பற்றி அதற்கு பொறுப்பானவர்கள் எந்தவிதமான அனுகூலவழிகளையும் அனுஷ்டித்துப் பயன்பெற்றதாகத் தெரியவில்லை.

தொத்துவியாதிகள் விசேஷமாய் எங்குகாணப்படுகின்றன? கிராமங்களில் இந்தக் கொடிய நோயை அநேகமாய்ப் பார்க்கமுடிவதில்லை. நாகரீகம் நிறைந்த நகரங்களில்தான் தொத்துவியாதி தோன்றி தன் தொழிலைத் துவக்குகிறது. எந்த வியாதிக்கும் நோயாளியின் கவனக்குறைவும் ஒழுக்கமற்ற வாழ்க்கைமுறையுமே காரணங்களெனினும் இந்தவியாதிக்கு அடிப்படையாக உற்பத்தி ஸ்தானம் " காபி நிலையங்கள் " என்று நாம் துணிந்து கூறலாம். காபி ஹோட்டல்களில் கையாளப்படும் ஆபாசமுறைகளைக் கண்ணுறும்

சுத்தநோக்கமுடைய யாரும் திகிலடைந்து வருந்தாமலிருக்க முடியாது. பலரும் அருந்தும் பாத்திரங்கள் ஒரே தொட்டியில் (அடிக்கடி சுத்தப்படுத்தப்படாத) போட்டுவைக்கப்படுகின்றன. கிளப்புக்கு வருகிறவர்களில் தொத்து வியாதியஸ்தர்களும் இருக்கக்கூடுமாதலால் அவரிடமிருக்கும் கிருமி விசேஷங்கள் அந்தத் தொட்டியில் குடிகொண்டு இந்த வியாதியின் உற்பத்திக்கு மூலஸ்தானமாக அமைகிறது.

தொத்து வியாதிகளை ஒழிக்கவேண்டுமாயின் அதற்குரிய அதிகாரிகள் தாங்கள் கையாளப்போகும் முறைகளுடன் காபி ஹோட்டல்களில் நடைபெறும் ஊழல்களையும் நிவர்த்திப்பது அவசியம்.

* * * *

வியாதிக்கும் வயது உண்டாம்!

ஆங்கில வைத்திய முறைகளில் பயிற்சிபெற்ற வைத்திய நண்பர் ஒருவரின் சிநேகம் அடியேனுக்குண்டு. அவருடன் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தபோது, "சுதேச முறைகளைப்போல உடனே சௌக்கியமாக்க உங்கள் முறையில் ஔஷதங்கள் இல்லையோ" என்று நான் கேட்டதற்கு பதிலாக அவர் "இருக்கிறது. ஆனாலும் நாங்கள் இரண்டு காரணத்திற்காக ஆபத்தான காலங்களில் அன்றி அதிக வன்மைவாய்ந்த ஔஷதங்களைப் பிரயோகிப்பதில்லை. ஏனென்றால் மருந்தின் கொடூரத்தால் வியாதி தீருவதற்கு பதிலாக வேறு வியாதிகள் உற்பத்தியாகக்கூடும். மேலும் பிணியாளனின் மன ஆறுதலுக்காகத்தானே மருந்து கொடுப்பது. வியாதியின் வேகம் அடங்கினால் அவன் தானாகவே சுகமடைவான். மனிதனையும் மற்ற ஜீவராசிகளையும்போலவே நோய்களுக்கும் ஆயுசு உண்டு. அந்தகாலம் தீர்ந்தால் வியாதி தானே நிவர்த்தியாகிறது" என்று கூறினார்.

அவர் மிகவும் சுத்தமான ஹிருதயமுடையவர். ஏதாவது மருந்துகளைக்கொடுத்துக்கொண்டேவந்தால் தானாக வியாதி நீங்கும்போது நீங்கட்டும் என்னும் கொள்கையை அந்த முறையின் லக்ஷணமாக கருதி அதை நிராகரிக்கவேண்டுமென்று நாம் கூறத்தயாராக இல்லையாயினும், பிரபல ஆங்கில நிபுணர்களும் நோயாளியின்பேரில் அனுதாபத்துடனும், தாம் கொடுக்கும் மருந்தின் நிவர்த்தி குணத்தில் திடநம்பிக்கையுடனும் தமது முறையை அனுஷ்டிக்கமுடியாமலிருப்பது எவ்வளவு பரிதாபம் என்பதையே இங்கே எடுத்துக்காட்டவேண்டியிருக்கிறது.



## மதிப்புரை.

ஆரம்ப ஆசிரியன். திருச்சி ஜில்லா ஆரம்ப ஆசிரியர், ஆசிரிய மேனேஜர் சங்கத்திலிருந்து வெளியாகும் ஓர் மாதாந்த தமிழ் பத்திரிகை. இதில் ஆரம்ப ஆசிரியர்களுக்குள்ள குறைகளும் பரிகாரங்களும் பிள்ளைகளுக்கு ஏற்படும் சில அசௌகரியங்களும் அதன் பரிகாரமும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றது. ஆரம்ப படிப்பை கட்டாயமாகவும் இலவசமாகவும் செய்யப்படவேண்டிய அவசியத்தைக்கருதும் இந்நாளில் இதுபோன்ற பத்திரிகை அவசியமென நிச்சயமாகச்சொல்லலாம். வருஷ சந்தா ரூ. ஒன்று.

# திரிதோஷம்.

பிஷகாசார்யர் ஸ்ரீமான் ஹரிரஞ்சன் மஜூம்தார் அவர்கள் M. A. டெல்லி, கூறுவதின் சாரமாவது :—

காற்று, உஷ்ணம், சீதம் இவைகளின் சமநிலைமையால் உலகம் சரிவர நடப்பதுபோலவும் அவைகளின் வைஷம்யத்தால் உலக நிலைமாறுவதுபோலவும், இந்த முத்தோஷங்களின் சமநிலைமையால் சரீரம் போஷிக்கப்படுவதும் விபரீதநிலைமையால் சரீரம் பாதிக்கப்படுவதும் இயற்கையாக விருக்கின்றது. சுதேசநூல்களுக்கிணங்க பலவித வெளிகாரணங்கள் சரீரத்தினுள் முத்தோஷங்களுடன் கலந்து அவைகளின் நிலையை பாதித்து விஷமிக்கும்படி செய்வதுடன், விஷமித்த அந்த தோஷங்கள் ரக்தம் முதலிய சப்த தாதுக்களையும் ஓர் குறிப்பிட்டமாதிரியில் பாதித்து ஓர் குறிப்பிட்ட வியாதியையுண்டுபண்ணுகின்றது. இதை உதாரணத்தால் விளக்குவோம். சூரிய வெப்பத்தில் ஒருவன் அதிகமாக திரிந்தால் இந்த வெளிகாரணம் சரீரத்தினுள் பித்தத்துடன் சம்பந்தித்து அதை விஷமிக்கும்படிசெய்வதால், விஷமித்த பித்தம் சரீரம் முழுவதும் வியாபித்து ரசம் என்ற தாதுவை ஓர் குறிப்பிட்டவழியில்கெடுத்து பித்தஜ்வரத் (bilious fever) தை உண்டுபண்ணுகின்றது. இவ்விதமே முத்தோஷங்களும் வெளிக்காரணங்களால் விஷமிக்கலாம். அவைகள் பல வியாதிகளையும் உண்டுபண்ணலாம்.

# வடமொழி சித்தவைத்தியம்.

தென்மொழியில் சித்தவைத்தியமெனச் சொல்லப்படுவது போல வடமொழியிலும் சித்தவைத்தியமென்பது பிரசித்தமே. ரசம், கந்தகம், பாஷாணம், உலோகம் முதலியவைகளை பக்குவப்படுத்தி வியாதிகளை வெல்லவும் சுகவாழ்வை விருத்திசெய்யவும் தகுந்த முறைகளைகூறும் நூல்களுக்கு சித்தர் நூல்களெனச்சொல்லப்படும். சித்தர், சாத்யர், கிந்நரர், கிம்புருஷர் என்று சொல்லப்படும் பலவகை தேவ கணங்களுள் சித்தர் என்பதும் ஒருவகை தேவகணமே. ரசத்தை (Mercury) நெருப்புக்கு ஓடாமல் கட்டும்படிசெய்து அதை உபயோகித்து சரீரத்தை ஸ்திரப்படுத்தி இந்த சித்திபெற்றவர்களே சித்தர்கள். ஷிது என்ற பதத்திலிருந்து ஸித்தி என்ற வார்த்தை யுண்டாகி அந்த ஸித்தியையுடையவன் ஸித்தன் என்று இந்த வடமொழிபதம் வந்ததாக வடமொழி இலக்கணம் கூறுகின்றது. தென்மொழியில் 18 சித்தர்கள் என்பது போல வடமொழியில் 27 சித்தர்கள் உளர். அவர்களான (1) ஆதிமர் (இவரே தென்மொழி திருமூலர்) (2) சந்திரஸேநர் (3) லங்கேசன் (இவரே ராவணன்) (4) விசாரதர் (5) கபாலீ (6) மதர் (7) மாண்டவ்யர் (8) பாஸ்கரர் (9) சூரஸேநர் (10) ரத்னகோசர் (11) சம்பு (12) ஸாத்விகர் (13) நரவாஹநர் (14) இந்திரதுமர் (15) முனிசிரேஷ்டர் (16) கபிலர் (17) வ்யாடி (18) நாகார்ஜுனர் (19) ஸுராநந்தர் (20) நாகபோதி (21) யசோதரர் (22) கண்டர் (23) காபாலிகர் (24) பாணுஸுரன் (25) கோவிந்தர் (26) லம்பகர் (27) பலிசக்கிரவர்த்தி. ராவணன் பலி சக்கிரவர்த்தி பாணாசுரன் இவர்களில் இருவர் வெகுகாலமிருந்து கடைசியாக யுத்தத்தில் மாண்டனரென்றும் பலிசக்கிரவர்த்தி இன்னும் உயிருடனிருப்பதாக புராணங்கள் கூறுகின்றன. இம் மூவரைப்பற்றி விஸ்தாரமாக கதைகள் எல்லோருக்கும் தெரிந்ததே. மற்ற 24 சித்தர்களுடைய சரித்திரம் நமக்கு புராணங்கள் மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ கிடைப்பது அரிது. ஆயினும் வைத்தியநூல்களில் இவர்களைப்பற்றிய சில விவரங்கள் காணுகின்றன. வாக்படர் எழுதியுள்ள ரஸரத்நஸமுச்சயம் ஆறுவது அத்தியாயத்தில்

“ ஸர்வேஷாம் ரஸஸித்தாநாம் நாம ஸங்கீர்தயேத் ததா
ஏதே ஸர்வேது ராஜேந்த்ரா: ரஸஸித்தா மஹாபலா:
சரந்தி ஸர்வலோகேஷு நித்யா போகபராயணா:
ஸப்த விம்சதி ஸங்க்யாகா ரஸஸித்தி ப்ரதாயகா: ”



“ ரசசம்பந்தமான காரியங்கள் நடைபெறும்பொழுது மேற்கூறிய ரஸஸித்தர்களை ஸ்மரணைசெய்யவேண்டும். அவர்கள் மேல்கூறியவிதம் 27 பேர்கள். இவர்கள் எல்லாரும் ஒவ்வொருகாலங்களில் சக்கிரவர்த்தியாய் அரசாக்ஷிசெய்தவர்கள். பிறகு காயசித்தி அடைய விருப்பம்கொண்டு ரசத்தை பக்குவம்செய்து புஜித்து அதனால் ஸித்திபெற்றவர்கள். இவர்களுடைய சரீரபலமும் மனோபலமும் புத்திபலமும் வரையறுக்க இயலாது. இவர்கள் எல்லா உலகங்களிலும் ஸஞ்சரிக்கின்றனர். இவர்கள் அழியாவுடம்பை பெற்றவர்கள். அந்தந்த உலகங்களில் போகங்களை அநுபவிப்பவர்கள். இவர்களை தியானித்து ரசகாரியங்களை துவக்கினால் வைத்தியர் சித்திபெறுவர் ”

இவ்விதம் சித்தர்கள் 27 பேர்களுள் சிலருடைய கிரந்தங்களை நமக்கு இப்பொழுது கிடைக்கின்றன சித்தர்களல்லாத பலரும் கிரந்தங்கள் எழுதியுள்ளார். அவைகளுக்கு ரஸதந்திரங்களெனப்பெயர். அவையாவன (1) ரஸாங்குசதந்திரம் (2) பைரவ தந்திரம் (3) நந்தீசுவர தந்திரம் (4) ஸ்வச்சந்தபைரவதந்திரம் (5) மந்தானபைரவ தந்திரம் (6) காகதந்திரம் (7) சண்டேசுவர் தந்திரம் (8) வாசுதேவ தந்திரம் (9) ருஷ்யசிருங்க தந்திரம் (10) கிரியாதந்திரஸமுச்சய தந்திரம் (11) ரசேந்திர திலகதந்திரம் (12) பாலுகி தந்திரம் (13) மைதில தந்திரம் (14) மஹாதேவதந்திரம் (15) நரேந்திர தந்திரம் (16) ரத்னாகரதந்திரம் (17) ஹரீசுவரதந்திரம் ஆக இந்த பதினேழு தந்திரங்களையும் மற்றும் பல தந்திரங்களையும் பார்த்தே அவைகளிலிருந்து வைத்தியத்திற்குமாத்திரம் வேண்டிய விஷயங்களை பொறுக்கி எடுத்துக்கொண்டதாக ஸ்ரீவாக்படர் ரஸரத்நஸமுச்சயத்தில் முதலாவது அத்யாயத்தில் கூறுகின்றனர். மேற்சொல்லிய தந்திரகிரந்தங்கள் ஸ்ரீவாக்படாசார்யருடைய காலத்தில் கிடைக்கக்கூடியனவாகவிருந்தன.

“ஏதேஷாம் க்ரியதேந்யேஷாம் தந்த்ராண்யாலோக்ய ஸங்க்ரஹ:” என்று சொல்லியிருப்பதால் மேற்கூறிய தந்திர கிரந்தங்களை படித்தே அவைகளை சுருக்கி தான் எழுதியதாக வியக்தமாக சொல்லியுள்ளார். இந்த தந்திர கிரந்தங்களே முதல்நூல்களாகும். மற்ற சித்தர்களுடைய நூல்கள் வழிநூல்களே. முதல் நூல்களில் பல நமக்கு கிடைக்கவில்லை. ஆனால் இவற்றுள் இரண்டாவது தந்திரமாகிய பைரவதந்திரம் என்பது பைரவர் தேவிக்கு உபதேசித்தது. இதற்கு பைரவதந்திரம் அல்லது ரஸார்ணவ தந்திரம் எனப்பெயர். இதன் பெருமையை “ரஸார்ணவாதி தந்த்ராணி நிரீக்ஷ்ய

வாக்படர் ரசரத்நஸமுச்சயம் 11-வது அத்யாயத்தில் கூறியுள்ளார். மேற்சொன்ன ரசார்ணவதந்திரம் அல்லது பைரவதந்திரம் அல்லது பார்வதிபரமேசுவரஸம்வாதம் என்னும் நூல் கல்கத்தா நகரத்தில் பெயர் பெற்ற பி. ஸி. ராய் என்ற மேதாவியால் கி. பி. 1910ம் வருஷத்தில் கல்கத்தாவிலேயே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இது 18 அத்தியாயம்கொண்டது. பார்வதிக்கு பரமசிவன் உபதேசித்த தாகையால் இது முதல் நூலாகும். மற்ற ரஸதந்திரங்களும் இதைபோலவே முதல் நூலாகும். முன்சொல்லிய ரஸஸித்தர் போன்றும் சிலர் பிற்காலத்திய சித்தர்களாக கருதப்பட்டுள்ளார்கள். அவர்களுள் நித்யநாதஸித்தரென்பவரு மொருவர். இந்த ஸித்தர் ரஸரத்நாகரமென்ற ஓர் ஒப்புயர்வற்ற நூலை எழுதியுள்ளார். பிறகு இத்தந்த்ரங்களைப்பார்த்து பலநூல்கள் ரசேந்திர சிந்தாமணி ரஸரத்னாகரம், ரஸமஞ்ஜரீ, ரஸபிரகாச ஸுதாகரம், ரஸஸாரம், ரஸஸங்கேதகலிகா, ஆயுர்வேதபிரகாசம், ரஸேந்திரஸாரஸங்கிரஹம் முதலிய பலபண்டிதர்களால் செய்யப்பட்டன. முதல் நூல்களாகிய தந்திர கிரந்தங்களில் ரஸகல்பமும் ரஸவாதமும் (அதாவது தங்கம் செய்வது) விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. வழிநூல்களாகிய ஸித்தர் நூல்களில் ரஸகண்டம் ரசேந்திரகண்டம், வாதகண்டம், ரஸாயனகண்டம், மந்திரகண்டமென ஐந்துகண்டங்கள் அல்லது பாகங்கள் தனித்தனியாகபிரித்து சொல்லப்பட்டிருக்கின்றது.

அவற்றுள் ரசகண்டமாவது :— வைத்தியனுக்கு அவசியம் தெரியவேண்டிய ரஸம், கந்தகம், பாஷாணம் உலோகம், முதலியவைகளின் இலக்ஷணங்களும் அவற்றின் சுத்தியும் அவற்றை பஸ்ம சிந்தூரங்கள் செய்யும் வகையும் அவற்றின் குணம் முதலியவைகளும் விஸ்தாரமாக வேறுகலப்பின்றி போதிக்கும்பாகம். இதையே "ரஸகண்டேது வைத்யாநாம்" என்று நித்யாநாதசித்தர் கூறியுள்ளார்.

ரஸேந்திரகண்டமாவது :— சரகம், சுசுருதம் முதலிய கிரந்தங்களில் போலவே ஒவ்வொரு வியாதியையும் பிரித்து தனிதனி அத்யாயத்தில் அந்தந்த வியாதிக்குரிய மருந்து வகைகளை விவரமாகச்சொல்லும்பாகம். இதையே நித்யாநாதரும் "வ்யாதிதாநாம் ரஸேந்திரகே" என்று இப்பாகம் வியாதிக்காரர்களுக்கு என்று ஒதுக்கிவைத்துள்ளார்.

வாதகண்டமாவது :— ஒரு உலோகத்தை மற்றொன்றாக மாற்றவும், ரத்னங்களை புதிதாகசெய்யும் முறைகளையும் கூறும்



பாகம். இரும்பு முதலிய கீழ் உலோகங்களை வெள்ளி முதலிய உயர்ந்த உலோகமாகவும், வெள்ளி முதலிய கீழ் உலோகங்களை தங்கமாகவும், மாற்று குறைந்த தங்கத்தை அதிக மாற்றுள்ளதாகச்செய்யவும், நீர் குறைந்த ரத்னங்களுக்கு நீரோற்றம் வரும்படி செய்யவும் வைரம் முதலியவைகளை செய்வதும் ஆகிய பலவிஷயங்களைச்சொல்லும்பாகம் இதுவே. இதையும் முன்போலவே பிரித்து ஔஷதபாகங்களுடன் சேர்க்காமல் தனிபாகமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதையே நித்யநாதரும் "வாதினாம் வாதகண்டேச" என்று ரசவாதத்தில் இச்சையுள்ளவர்களுக்காக வாதகண்டமென்று தனிப்படசொன்னேம் என்று கூறியுள்ளார். இந்த கண்டத்தை 16 அத்தியாயங்களடங்கியதாக எழுதியுள்ளார்.

ரஸாயனகண்டமாவது :— இதுவே கல்பமுறை: மூப்பு, நரை, மரணம்இவைகளை விலக்கவும், நோயற்றவாழ்வைஉண்டுபண்ணவும் தாது நஷ்டமடைந்தவர்களுக்கு தாது விருத்தியை உண்டு பண்ணவும் ஆயுளை விருத்திசெய்யவும் வழிகளை உபதேசிக்கும் பாகம். இதையே நித்யநாதரும் "விருத்தாநாம் சரஸாயநே" என்று வாலிபத்தை விரும்புகிறவர்களுக்குஇந்தபாகமெனகூறினார். முன்போலவே இந்தபாகமும் மற்ற பாகங்களுடன் கலந்து படிப்பவர்களுக்கு கலவரமுண்டுபண்ணாமல் தனியே சொல்லப்பட்டுள்ளது.

மந்திர கண்டமாவது :— ரசம் முதலியவைகளை ஸ்வாதீனப்படுத்தவும் மற்றும் பேய்.பிசாசங்களின் நிவர்த்தி முதலியவைகளுக்காக மந்திரங்களை உபதேசிக்கும்பாகம். இதுவும் முந்தியவைகளுடன் கலக்காமல் தனிபாகமாக வரையப்பட்டுள்ளது. "மந்திரிணாம் மந்த்ரகண்டேச" என்று மந்திரம் வேணுமென்ற இஷ்டமுள்ளவர்களுக்கு மந்திர பாகம் என கூறியுள்ளார். ஆகையால் "பஞ்சகண்டமிதம் சாஸ்த்ரம்" என்று ஸித்தர்களின் சாஸ்திரம் ஐந்துபாகம் அல்லது பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் தனி தனி கிரந்தங்களாக எழுதப்பட்டிருப்பதால் படிப்பவர்கள் சந்தேகமின்றி விஷயங்களை உணர்ந்துகொள்வது சாத்தியமாகின்றது. இந்த ஸித்தர் நூல்களில் மூலிகைகளின் சம்பந்தமிருந்தபோதிலும் ரசம், கந்தகம் முதலியவைகளே பெரும்பாலும் விஸ்தரித்து சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவற்றை விவரிக்கும் சாஸ்திரம் சித்தர் நூலெனவும் மூலிகைகளை விவரிக்கும் சாஸ்திரம் ஆயுர்வேதமெனவும் வழங்கலாயிற்று. ஆயுர்வேதத்தில் அஷ்டாங்கம் அல்லது எட்டுபாகம் என்று பிரிக்கப்பட்டு ஒவ்வொரு

பாகமும் பலரால் பலநூல்களாக எழுதப்பட்டதுபோல ஸித்த சாஸ்திரமும் ஐந்து பாகமாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகமும் பலரால் பல நூல்களாக எழுதப்பட்டுள்ளது. ஆயுர்வேதம் பிரம்மன் முதல் உபதேசபரம்பரையால் வந்ததாகவும் சித்த சாஸ்திரம் சிவன் முதல்உபதேசபரம்பரையாகவந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால் சரகம் சுசுருதம் போன்ற ஆயுர்வேத நூல்களில் சித்தர் முறை அல்லது சித்தவைத்தியம் கூறப்படவில்லையாதலால் சரகம் முதலிய கிரந்தங்களுக்குபிறகே வடமொழி சித்தநூல்கள் ஏற்பட்டிருக்கக்கூடுமென்று ஊகிப்பது சரியன்று. அப்படியாகில் ரஸார்ணவம் முதலிய முதல் நூல்களில் ஆயுர்வேத முறை சொல்லப்படவில்லையாதலால் சித்தநூல்களுக்கு பிந்திதான் சரகம் முதலிய நூல்கள் ஏற்பட்டதாக கூறவும்கூடும். தென்மொழி சித்த நூல்களில் ஆயுர்வேத முறையும் (மூலிகை முறையும்) பஸ்ம சிந்தூர முறையும் கலந்தே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் இவ்விரு முறைகளும் தமிழ் சித்த நூல்களின்படி யோசித்துப்பார்த்தால் ஒரேகாலத்தில் ஏற்பட்டதாகவேசொல்லவேண்டும். அதுபோலவே வடமொழியிலும் இவ்விருமுறைகளும் ஒரேகாலத்தில் ஏற்பட்டதாக கூறுவதும் பொருந்தும். ஆனால் தென்மொழியில் இரு முறைகளையும் ஒரே கிரந்தத்தில் சொல்லியிருப்பதுபோல வடமொழியில் ஒரே கிரந்தத்தில் சொல்லப்படவில்லை. மூலிகை முறைபோல பஸ்ம சிந்தூர முறையும் விரிவானதாலும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததாலும் படிப்பவர்களின் சௌகரியத்தை உத்தேசித்து இருமுறைகளையும் தனியாகவே பிரித்து தனி தனி கிரந்தம் எழுதியுள்ளார்கள். உதாரணமாக சித்தர்களில் 16-வதான கபிலர் என்பவர் (மகாபாரதம் முதலிய இதிஹாஸ புராணங்களில் பிரசித்தமானவர்) சித்தராகவிருந்தும் ஆயுர்வேதம்என்கிற மூலிகை வைத்தியத்தில் கிரந்தம்செய்திருப்பதாக சுசுருதம் சூத்திரஸ்தானம் ஆறுவது அத்தியாய வியாக்கியானத்தில் டல்லணர் என்பவருடைய வசனத்தால் ஏற்படுகிறது. அதுபோலவே நாகார்சுனன் என்ற சித்தர் சில சித்த நூல்களை வெளியிட்டதுடன் சுசுருதம் என்ற ஆயுர்வேத நூலை பரிஷ்காரம் செய்து இரண்டு முறைகளிலும் (மூலிகை முறையிலும், பஸ்ம சிந்தூர முறையிலும்) தன் பாண்டித்யத்தை வெளியிட்டார். முன்சொன்ன 17 முதல் சித்த தந்திரங்களில் ஒன்றாகிய பானுகிதந்திரம் என்ற சித்தநூலை எழுதிய பானுகி என்பவர் ஆயுர்வேதத்திலும் பானுகி தந்திரமென ஒரு நூல் வெளியிட்டிருப்பதாக சுசுருதம் ஸூத்திரஸ்தானம் எட்டாவது அத்யாய வியாக்கியானத்தில் சக்ரபாணி என்பவருடைய வசனத்தால் ஏற்படு



கின்றது. இதுபோல பல சித்தர்கள் இருமுறைகளிலும் தனிதனியாக நூல் எழுதி வெளியிட்டிருப்பதை பற்பல வியாக்கியான வசனங்களால் அறியமுடிகின்றது. ஆகையால் நாகார்சுனனுக்குபிறகே சித்தநூல்கள் வடமொழியில் ஏற்பட்டதாக சிலர் நினைப்பது தவறு என்பது வெகு காலத்திற்கு மிந்திய முதல் நூலாகிய ரஸார்ணவம் முதலிய நூல்களை படித்தவர்களுக்கு நன்கு விளங்கும்.

## சித்தர் காலம்.

இந்த 27 சித்தர்களுடைய காலம் எது. இவர்கள் எங்கு வசித்தனர். இதுபோன்ற பல கேள்விகள் உதிக்கின்றன. சிலர் கிறிஸ்துவுக்கு சுமார் ஆயிரம் வருஷத்திற்கு மிந்திதான் வேதம் ஏற்பட்டதென்றும் அக்காலத்தில்தான் ஆரியர்கள் என ஒரு வகுப்பார் அன்னிய நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்தனரென்றும் அதற்குபிறகே எல்லா வடமொழி சாஸ்திரபுராணங்கள் உதித்தனவென்றும் இதுபோன்று பலவிதமாக சொல்லுகின்றனர். இது சரித்திர விஷயமானதால் இதை விஸ்தாரமாக இவ்விடத்தில் எழுதிமுடிப்பது சற்று அசாத்தியமே. ஆகிலும் சுருக்கமாக இதற்கு விடையளிக்கின்றோம். ஆரியர் என ஒரு வகுப்பு அல்லது ஜாதி இந்தியாவில் குடியேறியதாகச்சொல்லுவதற்கு லேசம்கூட ஆதாரமில்லை. வடமொழியில் ஆரியர் என்ற வார்த்தைக்கு யோக்கியரெனப்பொருள். ஒரு ஜாதி அல்லது வகுப்பை இப்பதம் குறிப்பதாக எந்த வடமொழி நிகண்டுவிலும் சொல்லப்படவில்லை. தவிர நமது புராணங்களிலாவது அல்லது சுதேச பாஷை கிரந்தங்களிலாவது ஆரியர் என்ற பதம் ஓர் வகுப்புக்கு உபயோகப்படுத்தப்படவில்லை. தவிர விசாகதத்தன் எழுதிய முத்ராராக்ஷஸம் என்ற நாடகம் முதலியவைகளில் ஜாதி மத வேற்றுமையில்லாமல் உயர்ந்தோரைக்குறிப்பிடவே இப்பதம் உபயோகிக்கப்பட்டுளது. ஆரியர் என்றால் சான்றோர் அல்லது யோக்கியர் என்பதே அர்த்தமாக நிகண்டுவில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆரியர் என்பது ஓர் வகுப்பை குறிக்கும் பதமாகில் நிகண்டுவில் அவ்விதம் சொல்லப்பட்டிருக்கவேண்டும். மகாவீரசரிதம் போன்ற சில நாடகங்களில் அயோக்கியன் என்ற அர்த்தத்தில் அநார்ய என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த ஜாதியிலும் பெண்பாலர் (வேசிகள்கூட) தங்கள் புருஷர்களை கூப்பிடும்பொழுது "ஆர்யபுத்ர" என்றே அழைத்திருக்கின்றனர். அதாவது பெரியோர் மகன் எனப் பொருள். ஆகையால் பெரியோரை கூப்பிடும்பொழுது "சுவாமி" என்பதுபோன்ற பல பதங்களை தற்காலம் நாம் உபயோகிப்பதுபோல முன்காலத்தி

னும் வடமொழியில் "ஆர்ய" என்று அழைத்தனர். ஆர்ய என்பதின் ஓர் வித மாறுபாடாகிய ஐயா என்ற பதமும் தற்காலம் ஜாதி மத பேதமின்றி பெரியோர்களை கூவும் பதமாக உபயோகிக்கப்படுகின்றது. ஆகையால் தற்காலம் "ஐயா" என்ற பதம் எவ்வித அர்த்தத்தில் உபயோகப்படுகின்றதோ அவ்விதமே "ஆர்ய" என்ற பதமும் முற்காலத்தில் உபயோகத்திலிருந்ததாக சொல்லுவதுதான் பொருந்தும். பார்சிக்காரர் முதலிய சிலர் அன்னிய நாடுகளிலிருந்து வந்தது உண்மையே. ஆனால் இந்துக்கள் என அழைக்கப்படும் எல்லா ஜாதியினரும் இப்பரத நாட்டிற்கு உரியவர்களே. அதிகம் கூறின் விரியுமாதலால் இதோடு நிறுத்துகிறோம்.

கிருதம், திரேதா, துவாபரம், கலி, என்ற யுகங்கள் நாலும் சேர்ந்தது ஒரு சதுர்யுகம். இருபத்தெட்டு சதுர் யுகங்களுக்கு மிந்தி ராவணன் அரசாண்டதாகவும் அக்காலத்தில் சாமவேதத்தை கானம் செய்ததாகவும் நமது புராணங்கள் கூறுவதால் சித்தர்களில் சிலர் வெகுகாலத்திற்கு மிந்தி இருந்தார்கள் என்று தெரிகின்றது. நவீன சரித்திரக்காரர்கள் கிலகல்பனைசெய்து யுக்தியாக சரித்திரம் எழுதினார்களேயன்றி பழைய சரித்திரங்களையாராய்ந்து எழுதினதாக சற்றும் கூறமுடியாது. (இவ்விஷயத்தை புராதன இந்தியாவென்ற தனி புத்தகத்தில் பிறகு விரிவாக எழுதுவோம்.)

பாஷாணம், லோகம், சத்து (வடமொழியில் ஸத்வம் என வழங்குவர்) இவை தென்மொழி சித்தர் நூல்களைப்போல வடமொழியிலும் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ரஸாத்னஸமுச்சயம் முதல் அத்யாயத்தில் "ஸத்வம் பஸ்மகரணம் சம்ரவக்ஷ்யதே" என்று கூறப்பட்டிருக்கின்றது. ஸத்வம் என்பது ஸத்தெனப்பொருள். அப்பிரகம், தாளகம், மனோசிலை, பாஷாணம் போன்ற வஸ்துக்களை சுத்திசெய்து பிறகு சில மூலிகைகளைச் சேர்த்து மூஷையில் (தமிழில் மூசை என்பர்) வைத்து நெருப்பில் ஊதினால் அந்த பதார்த்தங்கள் கக்கும் வஸ்துக்களுக்கு ஸத்து எனப்பெயர். த்ருதி: என்பது இரும்பு, தங்கம்; அப்பிரகம் முதலிய வஸ்துக்களை சில மூலிகைகளின் மகிமையால் பாதரசம் போலச்செய்தல். இந்நிலைமை பிறகு எப்பொழுதும் மாறாது. பஸ்மகரணம் என்பது— இரும்பு முதலிய லோகங்களையும் ரஸம், கந்தகம், பாஷாணம் முதலியவைகளையும் நெருப்புக்கு ஓடாமல் கட்டி கஜபுடத்தில் பஸ்மம் அல்லது சிந்தூரம் செய்வது எனப்பொருள். இவற்றை விரிவாகக் கூறுவதே வடமொழி சித்தவைத்தியம்.

## நாடி.

ரோகங்களையறிய நாடி பரீக்ஷை மிக அவசியமானது. ரோகங்களையறிய பஞ்சலக்ஷணம் (நிதானம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்பிராப்தி என்னும் ஐந்து லக்ஷணங்கள் இவைகளின் விரிவு பிறகு வரும்) விரிவாக வடமொழி நூல்களில் கூறப்பட்டிருந்தபோதிலும் நாடி பரீக்ஷையை சரகம் முதலிய நூல்களில் விரிவாக சொல்லவில்லையே. சமீபத்தில் ஏற்பட்ட சார்ங்கதர ஸம்ஹிதைபோன்ற சில கிரந்தங்களில் அதுவும் மிக லேசாகவே நாடி பரீக்ஷை சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா என சிலர் நினைக்கக்கூடும். அது கொஞ்சமும் பொருத்தமுடையதல்ல. முற்கூறிய சித்தர்களில் ஒருவராகிய ராவணன் நாடீபரீக்ஷா என்ற புஸ்தகத்தை எழுதியுள்ளான். கணாதர் என்ற மகரிஷி நாடீவிக்யானம் என்ற நூலை வெளியிட்டுள்ளார். இதுபோன்ற பல மூலநூல்களை பார்த்து ஜனார்தனன் என்பவர் அகில ஸத்வைத்ய கௌஸ்துபம் என்ற நூலில் "லங்கேசாதி விபச்சிதாம்" என்று ராவணன் முதலிய பல பெரியோர்களின் நூல்களைப்பார்த்துதான் நாடீசாஸ்திரம் எழுதியதாக கூறுகின்றார். இது விஸ்தாரமான ஒரு பாகம் ஆகலால் இதை தனி கிரந்தமாக பெரியோர்கள் கருதினார்கள். சமீபத்தில் தோன்றிய சார்ங்கதார் போன்றவர்கள் எல்லா நூல்களையும் சுருக்கி ஒரு சிறிய புஸ்தகமாக வெளியிட்டிருக்கின்றனர். மூலிகைகளைப்பற்றி தனியாக ஆயுர்வேதமென சில கிரந்தங்களும் பஸ்ம சிந்தூர முறைகளைபற்றி தனியாக சித்தவைத்தியம் அல்லது ரசதந்திரம் என சில கிரந்தங்களும் நாடி பரீக்ஷையைப்பற்றி தனியாக சில கிரந்தங்களும் மூல நூல்களாகவும் வழிநூல்களாகவும் பல வடமொழியில் தற்காலத்திலும் காணப்படுகின்றதென்பதை வடமொழியை நன்குணர்ந்தவர் யாவருமறிவர். இதுபோலவே அஷ்ட பரீக்ஷைகளாலும் ரோகத்தை நிதானிக்கவேண்டுமென்றே ராவணன் நாடிபரீக்ஷா என்ற கிரந்தத்தில் சொல்லியிருப்பதைப்பார்க்கலாம். (மேற்கூறிய கிரந்தம் பம்பாய் நிர்ணயசாகர பிரஸில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது).

இவ்விதம் சித்தர்கள் காயசித்தி பெற்றிருந்தாலும் உலகத்தின் நன்மைக்காக தங்கள் அருமையான முறைகளைத்திரட்டி நூல்கள் மூலமாக வெளியிட்டிருக்கின்றனர். அவரவர்காலங்களில் உலக நன்மைக்காக நோயாளிகளுக்கு வைத்தியமும் செய்திருந்தார்கள். இந்த சித்தர்கள் துறவிகள் என்ற சன்னியாசி வகுப்பைச்சேர்ந்தவர்களல்ல. ஆனால் சித்தர்களில் சிலர் சன்னியாசிகளாகவிருக்கக்கூடுமாகிலும்சித்தர்கள்என்றவகுப்பே துறவிகள்எனகூறமுடியாது. சித்தர்களில் ஒருவராக தமிழிலும், வடமொழியிலும் கருதப்படும்

அகஸ்தியர் லோபாமுத்திரைஎன்றசம்சாரத்துடன் இருப்பதாகவே நாம் புராணங்களில் படிக்கின்றோம். ஆனால் சுசுருதத்திலும் மற்றும் தர்மசாஸ்திரங்களிலும் வைத்திய சாஸ்திரங்களை பிராமணர்கள் படிக்கலாமாயினும் வைத்திய தொழில் கூடாதென சொல்லப்பட்டிருக்கின்றது. வைத்தியர்களுக்கு சிவனும் விஷ்ணுவும் தெய்வமாக சொல்லப்பட்டிருப்பதுடன் ரஸ சாஸ்திரங்களில் சிவமந்திரங்களும் சிவ வணக்கமுமே மலிந்துகிடக்கின்றன.

ஆகையால் வடமொழி வைத்தியமும் தென்மொழிவைத்தியமும்

(1) பிரம்மா, சிவன் முதலியவர்களிடமிருந்து ஒரே பரம்பரையாக வந்ததாலும்

(2) நோய்களுக்கும், காயசித்திக்கும் ஏற்ற மருந்துகளை ஒரேமாதிரியாக உபதேசித்தலாலும்

(3) மூலிகைகள், உலோகங்கள், பாஷாணங்கள் முதலியவைகளைக்கொண்டே ஒரே மாதிரியாக ஔஷதம், கல்பம் இவைகளை விவரிப்பதாலும்

(4) நாடி, நிதான பஞ்சகம், நாடியுள்பட மற்ற பரீக்ஷைகள், இவைகளால் ஒரே மாதிரியாக ரோகங்களை நிஷ்கரிஷிப்பதாலும்

(5) சித்தர்கள், யோகிகள், முனிவர், இவர்களுக்குரியதாகவே வித்தியாசமின்றி சொல்லப்பட்டிருப்பதாலும்

(6) சிவனே பெரிய தெய்வமாக ஒரேவித அபிப்பிராயம் கூறுவதாலும்

இன்னும் பலவித காரணங்களால் ஒன்றெனவே படித்தவர் நினைப்பர் என்பது நமது துணிபு.

## மதிப்புரை.

விசால ஹிருதயம். இது ஓர் அரிய மாதாந்திர தமிழ் பத்திரிகை. தமிழ் பாஷையின் முன்னேற்றத்தை கருதி கல்வி, வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றைப்பற்றி அரிய பல விஷயங்களை வெளியிடும் உயர்ந்த நோக்கத்துடன் இது நடத்தப்படுகின்றது. இந்தியாவின் தற்கால வறுமையை விலக்க இதுபோன்ற பத்திரிகை அத்யாவசியமானது. தன் பெயர்கேற்ப இப் பத்திரிகை ஆசிரியருடைய விசால ஹிருதயத்தை நன்கு வெளிப்படுத்துகின்றது. தாய் பாஷையில் உணர்ச்சி காட்டும் நம் தமிழ் மக்கள் அனைவரும் இதனை ஆதரிக்கவேண்டுகிறோம். இதன் வருஷ சந்தா ரூ. 1.

விசாலஹிருதயம் ஆபீஸ்,
பத்மனாபபுரம், தக்கலை P. O.



குறிப்பு:— இக்காலத்தில் மலத்தைக்கட்ட கஞ்சா, அபின் போன்ற பதார்த்தங்களை உபயோகிக்கக்கூடாது. ஏனெனில் இவ்வியாதியில் பிதற்றல் அல்லது புலம்பல் (delirium) உண்டாகக்கூடுமாதலால் புத்தியை மயக்கக்கூடிய வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாது. ஆனால் இவ்வியாதியில் தூக்கமில்லாவிட்டால் தூக்கம் உண்டுபண்ண சில லாகிரி மருந்துகள் ஆங்கில வைத்தியத்தில் உபயோகிக்கின்றனர். ஆனால் அம்மருந்துகள் தன்னுள்ளும் தனக்குப்புறம்பிலும் நடக்கும்சங்கதிகளை அறியமுடியாமல் புத்தியைமயக்குவதுமாத்திரமின்றி ஆரோக்கிய குறியான தூக்கத்தை உண்டு பண்ணுவதில்லை. தூக்கம் வரும்படிசெய்ய சுதேசநூல்கள் ஒப்புகின்றனவேயன்றி புத்திமயக்கம் உண்டுபண்ணுவதை ஒப்பவில்லை.

ஸந்தத சுரத்தில் அதிசார சிகித்சை:—

தனியாக வெப்பாலைப் பட்டையை இடித்து ரசம் எடுத்து ஒரு அவுன்சு ரசத்தில் கால் ரூபாயிடை தேன்சேர்த்து கொடுக்கவும். இவ்விதம் தினம் ஒருவேளை கொடுக்கலாம்.

சந்தத சுரத்தில் வாந்தி சிகித்சை:—

2 தோலா சிந்தில் தண்டை இடித்து முன்போல கஷாயம் செய்து ஆறவைத்து அதில் கால்ரூபாயிடை தேன்சேர்த்து கொடுக்கவும். தினம் இரண்டுதடவை கொடுக்கலாம்.

2/1014

சந்தத சுரத்தில் தாக சிகித்சை:—

மழைகாலத்தில் கல்லுகளுக்கிடையில் நாய்க்குடை என்றும் காளான் என்றும் சொல்லுகிற ஓர் சாதி பூண்டு உண்டாகும். அதை வில்லைகளாக்கி நிழலில் உலர்த்தி பொடிசெய்து (வஸ்திரகாயம்செய்து) வைத்துக்கொள்ளவும். அந்த பொடியில் கால் ரூபாயிடை தேனில் குழைத்துக்கொடுத்தாலும் அல்லது ஜலத்தில் கலக்கி கொடுத்தாலும் அல்லது அந்த அளவு பொடியை அரை அவுன்சு ஜலத்தில் (நீரை கொதிக்கவைத்து பிறகு ஆறவைக்க வேணும்) போட்டு கால் மணி நேரம்வைத்து பிறகு வடிகட்டி அந்த தெளிவு ஜலத்தையாவது கொடுத்தாலும் நலம்.

சந்தத சுரத்தில் தாக சிகித்சை:—

அதிமதுரம், லவங்கம், கெக்ஷ்பாரி, கிராம்பு இவைகளை கஷாயம்செய்து அடிக்கடி ஒரு அவுன்சு கஷாயம் கொடுக்கவும்.

குறிப்பு:—திராக்ஷைப்பழத்தை சாமான்ய காய்ச்சலில் அப்படியே சாப்பிடும்படி நோயாளிக்கு கொடுத்தபோதிலும் இந்த காய்ச்சலில் கொடுக்கக்கூடாது. ஏனெனில் இது போன்ற பழங்கள் (பேரீச்சம்பழம்) அப்படியே சாப்பிடுவதால் சில சமயங்களில் குடல்களில் அப்படியே ஒட்டிக்கொள்ளுகின்றன. இதற்கு வடமொழியில் உபலேபி எனப் பெயர். குடல் புண்ணாக விருக்கும் நிலைமையில் இது மிகவும் கெடுதலையுண்டுபண்ணும்.

சந்ததசுரத்தில் தாஹத்திற்கு:—

சுக்கான் கீரையை காடிவிட்டரைத்து நாக்கில் பூசி கால்மணி வைத்திருந்து பிறகு சுத்த ஜலத்தைவிட்டு வாயை கொப்பளித்து உமிழ்ந்து விடவும்.

குறிப்பு:—இந்த முறை நோயாளி ஞாபகத்துடனும் போதியவளவு சக்தியுடனும் இருந்தால்தான் முடியும். நாக்கில் தடவிய மருந்து உள்ளுக்குபோகாமல் இருக்கவேணும். ஏதோ கொஞ்சரசம் உள்சென்றதால் பாதகமில்லை.

சந்தத சுரத்தில் உதடு நாக்கு வெடிப்புகளுக்கு மருந்து:—

கிஸ்மிஸ் என்ற திராக்ஷைபழத்தை குச்சி முதலியவை இல்லாமல் பொருக்கி எடுத்து தேனைவிட்டரைத்து கொஞ்சம் பசும்நெய்யையும் கலந்து குழைத்துக்கொண்டு நாக்கிலும் உதட்டிலும் தடவிவர வெடிப்புகள் விலகும்.

சந்தத சுரத்தில் பிரக்ஞையற்றிருந்தால்:—

இந்துப்பு, முருங்கை விதையின் உள் பருப்பு, கடுகு, கோஷ்டம் இவைகளை சமமாக எடுத்து வெள்ளாடு மூத்திரத்தால் சந்தனம்போல விழுதாக அரைத்து ஒரு வெள்ளைத்துணியில் போட்டு கட்டிக்கொண்டு நோயாளியின் ஒவ்வொருமூக்கிலும் இரண்டுதுளிகள் விழும்படி மெதுவாக பிழியவும். பிரக்ஞையுண்டாகும்.

ஸந்தத சுரத்தில் வியர்வை அதிகம் கண்டால்:—

கொள்ளு கால்படி எடுத்து ஒரு சட்டியில் வறுத்து அதை யந்திரத்திலாவது மற்ற சாதனங்களிலாவது பொடிசெய்து அந்த பொடியை (வஸ்திரகாயம் செய்த பொடியை) ஒரு வஸ்திரத்தில் கட்டி உடம்பில் ஒத்தடம் கொடுக்கவும்.



குறிப்பு :— இது வெளி உபசாரமாகும். கட்டுக்கடங்காத வியர்வை உண்டாகும் காலத்திலும் வியர்வையில்லாமல் கைகால் சீதம் பிறந்து ஜில்லிட்டுப்போகும்காலத்திலும் இப்பொழுது சொன்ன சிகித்சையும் தவிடு, மணல் முதலியவைகளை வறுத்து உஷ்ணமாகும்வரையில் ஒற்றிடம் கொடுப்பதும் வழக்கம். இதுவும் வெளி உபசாரமே. இப்பேர்ப்பட்ட காலங்களில் வியர்வையடங்கவும் கை, கால், உடம்புகளில் சீதம் மாறி உஷ்ணமுண்டாகவும் உள்ளுக்கு மருந்துகொடுப்பது பிரதானமாகும். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் டர்பன்டைன்என்ற தைலத்தைத்தடவுவதும் கம்பளியால் கை கால்களை சுற்றுவதும் போன்ற சில காரியங்களும் சில மருந்துகளும் ஆங்கில வைத்தியத்தில் சொல்லப்படுகின்றன. ஆனால் இக்காலங்களில் அம்மருந்துகள் விசேஷ பலன் அளிப்பதில்லை. நமது முறைகளில் பல பஸ்ம சிந்தூரங்கள் மிகுந்த குணத்தை விரைவில் கொடுக்கின்றன. அதிலும் இக்காலத்தில் வீர பஸ்மம் அல்லது வீர சிந்தூரம் மிகுந்த நன்மையை கொடுக்கின்றது. மருந்து உட்கொண்ட அரைமணிக்குள் நோயாளியின் சரீரத்தில் எப்பாகத்திலும் உஷ்ணம் உண்டாகின்றது. கைகால் ஜில்விடுவதற்கு காரணம் ஆங்கில வைத்தியர்கள் ரக்த ஓட்ட குறைவு என்று சொல்லுகிறார்கள். உடம்பு முழுவதிலும் சீதம் காணுவதற்கும் இதுவே காரணம் என்றும் நினைக்கின்றார்கள். சுதேச வைத்தியர் இதற்குமாறாக அபிப்பிராயப்படுகின்றனர். சரீரத்தில் உஷ்ணம் குறைந்தால்தான் சீதம் மேலிடுகின்றதென்கின்றனர். உஷ்ணத்திற்கு காரணம் பித்தமென முன்பே சொன்னோம். பித்த சக்தி குறைவால் உஷ்ணம் இயற்கைக்கு குறைந்துவிடுகின்றதென்றும் அக்காலத்தில் இதற்கு மாறான குணமுள்ள கபம் உடனே மேலிட்டு சீதத்தை விளைவிப்பதாகவும் ஆகையால் பித்தத்தின் சக்தியை விருத்திசெய்ய வழிதேடவேண்டுமென்றும் அதற்கு உள்ளும் வெளியும் சிகித்சைசெய்யவேண்டியதென்றும் அப்படி செய்யாவிட்டால் ரக்த ஓட்டத்திற்கு காரணமான உஷ்ணம் குறைவதால் சரீரத்தில் ரக்த ஓட்டம் தடைபட்டு நின்று கடைசியில் மரணத்தை விளைவிக்குமெனவும் நினைக்கின்றனர்.

சந்தத சுரத்தில் இருமலுக்கு :—

இக்காய்ச்சலில் இருமல்காணுவது ஓர் அரிஷ்டம் அல்லது அவகுறியாகும். ஆடாதோடை இலை, சிறுகாஞ்சொறி வேர், வகைக்கு தோலா 2, இவைகளை இடித்து தூள்செய்து கஷாயம்போட்டு

தினம் மூன்றுவேளை கொடுத்து வரவும். தாளக பஸ்மத்தை தேன் விட்டு குழைத்து தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கலாம். (இந்த முறைகள் ஸாரஸங்கிரஹம் என்ற தலையங்கத்தில் தனித்து சொல்லப்படும்.)

*சந்தசுரத்தில் குடலில் காணும் புண்ணுக்கு மருந்து :—*

கொம்பாக்கு ஒரு தோலா பொடிசெய்து அரைபடி ஜலம் விட்டு வீசம்படியாக வற்றவைத்து அதை வடிகட்டி அரைக்கால் ரூபாயிடை தேன்விட்டு கொடுக்கவும். இவ்விதம் தினம் மூன்று தடவை கொடுக்கலாம்.

குறிப்பு :— இந்த சுரத்தில் குடல் புண்ணுவதும், சில சமயங்களில் குடல் கிழிந்துபோவதும் நேரிடுமென்பதை கீழே சொல்லியிருக்கிறோம். இம்மருந்து கிழிந்த குடல்களைக்கூட ஒன்று சேர்க்கும் சுபாவமுள்ளது. குடல்களில் புண்ணை வெகு விரைவாக ஆற்றிவிடும். இதை நன்றாக பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து கால் ரூபாயிடை பொடியை தேனில் குழைத்துகொடுக்கலாம். இவ்விதம் தினம் நான்கு தடவை உபயோகிக்கலாம். ஆனால் அதைவிட கிஷாயம் செய்து கொடுப்பதே நல்லது.

*சந்தசுரத்தில் மல மூத்திரங்களில் போகும் ரத்தத்திற்கு:—*

புஷ்ப்பிக்காத அதாவது நடுபருவமுள்ள நாயுருவியின் வேரை (பச்சையான) வென்னீர் ஜலம் விட்டு சந்தனம்போல அரைத்து அரைதோலாவை வென்னீர் ஜலத்தில் கலக்கிகுடிக்கவும்; இவ்விதம் தினம்இரண்டு அல்லது மூன்றுதடவைஉபயோகிக்கவும்.

நாயுருவிவிதை இரண்டு தோலாவை கிஷாயம் செய்து தினம் இரண்டு தடவை கொடுக்கவும்.

குறிப்பு :— குடல் புண்ணுக்கும், ரக்தம் வருவதற்கும் காரணமொன்றாகவேயிருப்பதால் இந்த காலத்தில் சீனக்காரம் அல்லது படிகாரம் பஸ்மம் செய்து அதில் நான்கு குன்றிமணியிடை தேனில் குழைத்து தினம் இரண்டு அல்லது மூன்று தடவை உள்ளுக்கு கொடுக்கலாம். பஸ்மம் செய்யும் சுலபமானமுறை :— தேவையான சீனக்காரத்தை தோய்ந்த பசுநெய்யில் முழுக்கி பிறகு அப்படியே அதை ஒரு சிறு சட்டியில்வைத்து மேல் அகல் மூடி சீலமண்செய்து 50 முட்டைகள் (பசும்சாண முட்டைகள்நல்லது)



அடுக்கி புடம் போடவும். பிறகு ஆறியவுடன் அதை எடுத்து சீசாவில் அடைத்துவைத்துக்கொள்ளவும்.

நோயாளிக்கு கஞ்சி, தண்ணீர், பால் முதலியவைகளை உள்ளுக்கு கொடுக்கும்பொழுது இரண்டு அல்லது ஒரு குன்றிமணியிடை ஷை பஸ்மத்தை போட்டு கொடுத்துவரலாம்.

*சந்தசுரத்திற்கு மருந்து :— கஸ்தூரி பைரவகுளிகை.*

கஸ்தூரி, பச்சைகர்பூரம், தாம்ரபஸ்மம், காட்டாத்திப்பூ, தங்கபஸ்மம், வெள்ளிபஸ்மம், முத்துபஸ்மம், பவழ பஸ்மம், அயசிந்தூரம், மலைதாங்கிவேர், வாய்விளங்கம், கோரைகிழங்கு, சுக்கு, வில்வமிச்சவேர், தாளக பஸ்மம், அப்பிரகசிந்தூரம், நெல்லிவத்தல் இவைகளை சம இடையாக எடுத்து கல்வத்தில்போட்டு எருக்கன் இலை ரசத்தால் நான்கு ஜாமம் அரைத்து இரண்டு குன்றிமணி இடையாக மாத்திரை உருட்டி நிழலில் நன்றாக உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும். வேளை ஒன்றுக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் மூன்றுவேளை உபயோகிக்கவும். கால் ரூபாயிடை இஞ்சியை தட்டி ரசம்பிழிந்து ஒரு வெள்ளிபாத்திரத்தில் சற்று அந்த ரசத்தை வைத்திருந்தால் அடியில் சுண்ணாம்பு படிந்திருக்கும். சுண்ணாம்பை நீக்கிமேல் தெளிவைமாத்திரம் தனியாக எடுத்து அந்த ரசம் அரைக்கால் அவுன்சு ஷை மாத்திரைக்கு அனுபானமாக கொடுக்கவும்.

குறிப்பு:- இந்தகுளிகை மிகவும் உயர்ந்தது. இது கைகண்ட முறை. ஆனால் இந்த குளிகையை வைத்தியரல்லாதார் செய்வது மிக கடினம். ஏனெனில் இதில் பலபஸ்ம சிந்தூரங்கள் சேருகின்றன. அந்த பஸ்ம சிந்தூரங்களின் செய்முறைகளை இவ்விடம்விவரிப்பது கடினம். இதற்கென இனிவெளிவரும் ஒளஷதமுறைகளில் கவனிக்கலாம் உலோகங்களையும், அப்பிரகம், தாளகம் முதலியவைகளையும் பலர் பலவிதமாக பஸ்மங்களாகவும் சிந்தூரங்களாகவும் செய்கின்றனர். எந்த முறைப்படியாவது கீழ்சொன்ன மருந்தின் உலோகங்களையும் அப்பிரகம் முதலியவைகளையும் பஸ்ம சிந்தூரம்செய்து மேற்படி மருந்தை முடிக்கலாம். அதிலும் தங்க பஸ்மம், அப்பிரக சிந்தூரம், என்பன போன்றவைகளை அவ்விதமே தயாரிக்கவேணுமென்ற நிர்பந்தமில்லை. தங்க பஸ்மத்திற்கு பதிலாக தங்க சிந்தூரத்தையும், அப்பிரக சிந்தூரத்திற்கு பதிலாக அப்பிரக பஸ்மத்தையும் இம்மருந்தில் சேர்க்கலாம். இதுபோலவே மற்றும்

இம்மருந்தில் சேரும் பஸ்ம சிந்தூரங்களையும் உபயோகிக்கலாம். இதில் சொன்ன சில கடை சரக்குகளை தனியாக இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு கல்வத்திலிட்டு பிறகு கஸ்தூரி முதலிய வஸ்துக்களைசேர்த்து அரைக்கவேண்டும். எருக்கம் தழைகளை கொண்டுவந்து சற்றுநேரம் வைத்திருந்தால் அதின் காம்பிலுள்ள பால் நீங்கிவிடும். பிறகு காம்பை துணியால் நன்றாக துடைத்துவிட்டு தழைகளை உரலில் போட்டு ஜலம்விடாமல் இடித்து ரசம் பிழிந்துகொள்ளவும். காம்பில் பால் விலகாமலிருந்தால் அப்பொழுது காம்பை ஒட்டி அரை அங்குலம் தழையை நறுக்கிவிட்டால் பால் நின்றுவிடும். கல்கத்தா காசி பம்பாய் முதலிய இடங்களில் இம்மருந்தை பலர் கையாண்டுவருகின்றனர். இம்மருந்தில் முத்து, பவழம் இவைகளை பஸ்மமாக்காமல் அப்படியே உபயோகிக்கின்றனர். இந்த இரண்டு வஸ்துக்களையும் அப்படியே உபயோகிப்பதால் பாதகமில்லையென்பதை ஒப்புக்கொண்டாலும் அவர்கள் தாளகத்தை சுத்திமாத்திரம் செய்து பச்சையாக உபயோகிப்பதை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. இம்மருந்தில் இது ஒன்றுதான் விஷவஸ்து. இதையும் கஜபுடத்தில் பஸ்மமாக்கி உபயோகித்தால் உண்மையில் இம்மருந்தை ஓர் அமிருதமெனவே கூறலாகும். விதிப்படி இவ்வஸ்துக்களை முதலில் சுத்திசெய்து பிறகு அவரவர்கள் முறைப்படி பஸ்ம சிந்தூரம் செய்து இம்மருந்தை தயார்செய்து வைத்திருந்தால் இக்கொள்ளை நோய்க்கு பலர் இரையாகாமல் தப்பித்துக்கொள்ளலாம். தவிர கல்கத்தா முதலிய இடங்களில் தாம்பிரபஸ்மத்தை பலர் முறைதெரியாமல் செய்து இம்மருந்தை முடித்திருக்கின்றனர். ஆகையால் கம்பெனிகளை நம்பி மருந்தை விலைக்கு வாங்கும் வழக்கத்தை நிறுத்தி வைத்தியனே தன் மனதார அறிந்து மருந்தை தயாரித்துக்கொள்வதே உயர்ந்த வழி. இம்மருந்தை பலவித ஜன்னிகளுக்கும் முன்சொல்லிய அநுபானத்தில் கொடுக்கலாம். தவிர ஸந்தத ஜ்வரத்தில் சொல்லிய விரிவான முறைகளை இதுபோன்ற ஜன்னிகளிலும் உபயோகிக்கலாம். உதாரணமாக சில ஜன்னிகளில் ரக்தவாந்தி முதலியவை காண்கில் அப்பொழுது ஸந்ததசுரத்தில் அவற்றிற்கு சொல்லிய மருந்துகளை இதற்கும் உபயோகிக்கலாம். ஸந்ததசுரத்தில் காணும் சில அவஸ்தைகள் பல ஜன்னிகளிலும் காணுவதால் இதற்கு சொல்லிய சிகித்சையையே அதற்கும் செய்யலாம். ஜன்னிகள், குடிலசுரங்கள், ஸந்ததசுரம் இவைகளுக்கு பொதுவாகபயமின்றி, பாஷாணபஸ்மம், வீரபஸ்மம் அல்லது சிந்தூரம், தாளகபஸ்மம், கஸ்தூரி பைரவ



மாத்திரை இவைகளை உபயோகிக்கலாகும். நோயாளி பிரக்ஞையற்று இக்குளிகையை விழுங்க சக்தியற்றிருந்தால் சந்தனக்கல்லில் இரண்டு அல்லது மூன்று துளி தேன்விட்டு இம்மாத்திரை அல்லது குளிகையை தேய்த்து நாக்கில் தடவலாம். பிறகு முன்சொல்லிய இஞ்சிரசத்தை துளி துளியாக உள்செலுத்தவேண்டும். சில சமயங்களில் பல்கிட்டிப்போவதுமுண்டு. அக்காலங்களில் பல்லை சற்று பலாத்காரத்தால் விலக்கி முன்சொல்லியவிதமாக மருந்தை உள்செலுத்தவேண்டும். பஸ்ம சிந்தூரங்களை தேனில் குழைத்து நாக்கில் தடவிவிடவேண்டும். இவ்விதம் நோயாளிக்கு நாக்கில் மருந்தை தடவும்காலத்தில் மிகஜாக்கிரதையாக விருக்கவேண்டியது அவசியம். ஏனெனில் நோயாளி மதிகெட்டிருப்பதால் மருந்தைதடவும் காலத்தில் சரேலென விரல்களை கடித்துவிடுவதுண்டு. அது பெருத்த விபத்தாகுமாதலால் நோயாளியை நாக்கை வெளியில் நீட்டச்சொல்லி வெளியில் நீட்டிய பிறகே மருந்தை தடவவேண்டும். அப்படி முடியாத காலங்களில் ஒரு உத்தரணி ஜலத்தில் மருந்தை கலக்கி உள் செலுத்தவேண்டியது.

### முறைகாய்ச்சல். Ague, Intermittent.

இதற்கு விஷமஜ்வரமென வடமொழியில்சொல்லுவார்கள். இது பலவகைப்படும். இரண்டாம்முறை, மூன்றாம்முறை, நாலாம்முறையென இக்காய்ச்சலை வழங்குவர்கள். வடமொழியிலும் ஸந்ததம், அந்யேத்யு:, திருதீயகம், சாதுர்த்தகம், இவைகளின் விபர்யயம் என பலவகைகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவை யெல்லாவற்றையும் முறைகாய்ச்சல் என பொதுப்பெயரால் அழைக்கலாம். ஆங்கிலத்திலும் மலேரியா காய்ச்சலெனவும் சொல்லுவார்கள். இவைகளுக்கு பொதுவான லக்ஷணமாவது, காய்ச்சலின் வேகம் தணிந்து தணிந்து பிறகுஅதிகரித்தல். முறைகாய்ச்சல் எல்லாவற்றிலும் காய்ச்சல் வேகமாக அடித்து சுவல்பகாலம் அல்லது நாள் தணிந்திருந்து பிறகு மறுபடியும் வேகம் அதிகரிக்கின்றது. இதையே " விஸர்கோ விஷமஜ்வரலக்ஷண: " என்று விட்டு விட்டு வருதலே விஷமஜ்வரம் அல்லது முறைகாய்ச்சல் என முனிவர் கூறியுள்ளார். இம்முறைகாய்ச்சல் எல்லாவற்றிற்கும் பொதுவான குறியாவது :— வயிற்றில் ஓர்வித தொந்திரவும், சோம்பேறித்தனம் முதலிய சில முன்சொன்ன காய்ச்சல் குறிகளும், இடுப்பு, கால், முதலியவைகளில் வலியும், கண், உள்ளங்கை இவைகளில் எரிச்சலும், காதுகளில் ஓர்வித சப்தமும் ஆகிய இவைகளோ.

ஆனால் சிலருக்கு மிககடினமான தலைவலிமாத்திரம் இருப்பதுண்டு.
அல்லது முன் சொல்லியவைகளுடன் தலைவலியும் சேர்ந்திருப்பது
ண்டு. நாக்கில் மாசுபடிந்திருக்கும். சிலருக்கு இலேசான ஒக்கா
ளம் அல்லது வாந்திதோன்றுவதுண்டு. சிலருக்கு மஞ்சளான பித்
தநீர் படிக்கணக்காக பலதடவை வாந்தி ஆவதுமுண்டு. அனேக
மாக முறைகாய்ச்சல் எல்லாவற்றிலும் உடம்பில் குளிர்காணும்.
சிலருக்கு அக்குளிர் நாபியிலிருந்து உண்டாவது போல தோன்
றும். பிறகு அதை ஒட்டி உடம்புமுழுவதும் நடுக்கமுண்டாகும்.
மிகபனியுள்ள காலங்களில் பல்கிட்டுவதுபோல இந்த சமயத்திலும்
நேரும். சிலருக்கு முன்சொன்ன குறிகள் தோன்றாமலே திடீ
ரென இந்த குளிரும் நடுக்கமும் ஆரம்பிக்கலாம். இவ்விதம் குளி
ரும் நடுக்கமும் வேகமாக இருக்கும் காலத்திலேயே நாடிகள் பட
படத்து நடப்பதுடன் உஷ்ணமும் இயற்கைக்கு அதிகமாகும். தாவ
ரட்சி மிகுதியாகதோன்றும். ஆரம்பத்தைவிட இந்த சமயத்தில்
வாந்தி அதிகரிக்கும். உடம்பு முழுவதிலும் அல்லது ஒரு பாகத்
தில் வலி மிகுதியாக விருக்கும். குளிர் வேகம் தணிய தணிய
சரீரத்தினுள் தாபம் அதிகரிக்கும். சரீரத்தின் மேல்பாகத்தில்
அவ்வளவு தாபம் இராது. இந்த குளிரும் நடுக்கமும் சிலருக்கு
சில நிமிஷங்களும் சிலருக்கு சில மணிகளும் நீடித்திருக்கும். இம்
முறைக்காய்ச்சலில் சரீரத்தின் மேல் பாகத்தில் முதல்முதல் உஷ்
ணம் நோயாளியின் நெற்றி கழுத்து இவைகளில் தட்டுப்பட்டு பிற
கு சகல சரீரங்களிலும் தோன்றும். குளிர் ஆரம்பித்த பொழு
தும் பிறகும் இவ்வியாதியில் நோயாளிக்கு சிறுநீர் மிகுதியாக இற
ங்கும். சில சமயங்களில் நீர் நிறமில்லாமலும் காய்ச்சல் மிகுந்த
வேகத்துடன் அடிக்கும்பொழுது மிகுந்த மஞ்சள் நிறமாகவும்
இறங்கும். மற்ற காய்ச்சல்களைக்காட்டில் இம்முறை சுரங்களில்
நோயாளிக்கு வெப்பம் மிகுதியாகத்தோன்றும். 105 அல்லது
106 டிக்கிரிவரையில் உஷ்ணம் தோன்றும். நோயாளி குளிரால்
ஹிம்சைப்படும் தருணத்தில் உஷ்ணம் இயற்கைக்கு அதிகமான
தாக அவன் அறியாவிட்டாலும் குளிருக்குமுந்தியே உஷ்ணம் அதி
கரிக்க ஆரம்பித்துவிடுகின்றது. இம்முறைகாய்ச்சல் அடிக்கும்
காலம் பலவிதப்படுகின்றது. சிற்சில ஸ்தலங்களையனுசரித்தும்
வேறுபடுகின்றது. பம்பாய் முதலிய இடங்களில் இம் முறைகாய்
ச்சல் சில நிமிஷங்கள் வீசி தணிந்துவிடுகின்றது. சிலருக்கு அதி
ககாலம் வீசுகின்றது. 6-மணி அல்லது அதற்கும் அதிக காலம்
அடிப்பதுமுண்டு. தணியும் காலத்தில் நெற்றி கழுத்து இவைக



ளில் இலேசான வியர்வை தோன்றும். பிறகு சரீரம் முழுவதும்
வியர்வை அதிகரிக்கும். சிலருக்கு அபரிமிதமாக வியர்வைகாணு
வதுமுண்டு. வியர்வை சிலமணிநேரம் நீடித்திருப்பதுமுண்டு.
வியர்வைகண்டவுடன் நாடியின் வேகம் தணியும். வெப்பமும்
கொஞ்சம் கொஞ்சமாக தணிந்து சுபாவநிலைமை உண்டாகும்.
அக்காலத்தில் சரீரபலம் குறைந்திருந்தாலும் ஆரோக்கிய நிலைமை
யில் இருப்பதுபோலவே நோயாளிக்குத்தோன்றும். காய்ச்சல்
தணிந்த பிறகு மூத்திரம் அல்பமாகவும் மஞ்சள் நிறமாகவும் இற
ங்கும். சிலருக்கு இவ்வியாதி ஒரு நாள் ஹிம்சித்து பிறகு சிலவா
ரங்கள் வராமலிருந்து பிறகு வருவதுமுண்டு. சில சமயங்களில்
ஓர் குறிப்பிட்டகாலத்தில்வரும். காலம் மாறியும் வரும். இம்
முறைகாய்ச்சல் சில நாள் அடித்தபிறகு ஆரம்பகுளிர் இல்லாமலே
காய்ச்சல் மாத்திரம் சில சமயங்களில் அடிக்கின்றது. குளிரும்
நடுக்கமும் அதிகமாகவிருந்தால் காய்ச்சல் வேகம்தணிந்தும் குளிர்
நடுக்கம் இவைதணிந்திருந்கால் காய்ச்சல் வேகம் அதிகப்பட்டும்
இருக்கும். ஆரம்பத்தில் சிலருக்கு இரண்டு அல்லது மூன்று
முறைகள் இலேசாகவும் பிறகு முறைகள் பலமாகவும் வருகின்
றன. தாபம் மிகுந்த சமயங்களில் தலையில் வேதனையும், புலப்ப
டும். மனம்போனபடி பேசுவதும், சிலசமயங்களில் ஆப்தர்களைகூட
அறியமுடியாதபடி புத்திதடுமாற்றமும் உண்டாகும். சில முறை
காய்ச்சல்களில் பிரதானமாக வயிற்று சங்கடமும் வாந்தியுமே
காண்கின்றன. மருந்து ஆகாரம் இவைகள்கூட வயிற்றில் தரிப்ப
தில்லை. இவ்வியாதி சிலநாள் நீடித்தபிறகு சரீரத்தில் உள் அவய
வங்கள் கெடுகின்றன. அவற்றுள் கல்லீரல் மண்ணீரல் இவைக
ளே பிரதானங்கள். சரீரம் வெளுப்பதாலும் அல்லது மஞ்சள்
நிறமாவதாலும், வயிற்றின் இரண்டுபாரிசங்களில் வலியாலும் அல்
லது அவைகளில்கனமிகுதியாலும் இதுபோன்றபரீக்ஷைகளால் அ
வற்றின் கெடுதிகளை தெரிந்துகொள்ளலாம். தவிர இம்முறைகாய்
ச்சலுடன் அதிசாரம், ஹிருதயதுடிப்பு, காசம், மூக்கில் ரத்தம் வ
டிதல், இதுபோன்ற வியாதிகளும் சேர்ந்துவரும். இக்காய்ச்சலால்
ரத்தம் முறிந்து நிறம் கருஞ்சிவப்பாக மாறுவதால் சிலருக்கு மூத்
திரம் கருஞ்சிவப்பாக இருப்பதுமுண்டு. காலதோஷத்தால் பூமியி
லிருந்தாவது அல்லது பூமியிலுள்ள வேறு வஸ்துக்களிலிருந்தாவ
து மலேரியா என்று ஆங்கிலத்தில் பெயர்கொண்ட ஓர் விஷம் ஜலம்
நீரிலாவது அல்லது ஆகாயத்திலாவது முதலில்பாவி அங்குள்ளகொ

சுக்களில் கலந்து பிறகு அக்கொசுக்களின் கடியால் மனிதர்களுக்கு இவ்வியாதி அணுகுவதாக ஆங்கில நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஈரம் கசிந்த நதிகளின் ஓரங்களிலும், மலைகளின் சரிவுகளிலுள்ள அடர்த்தியான காடுகளிலும், வருஷம் முழுவதும் சாகுபடியாகும் நிலங்களிலும், அடிக்கடி வெள்ளத்தால் மூழ்கும் பிரதேசங்களிலும், புதியஜலம் தேங்குமிடங்களிலும், உப்புமண் மிகுந்த சதுப்பு நிலங்களிலும், தரைமட்டத்திற்கு தணிந்தும் ஈரக்கசிவுள்ளதுமான பிரதேசங்களிலும், வெகுநாள் சாகுபடியில்லாமலிருந்து புதிதாக சாகுபடியாகுமிடங்களிலும் அல்லது தோண்டப்படும் இடங்களிலும், இந்த விஷாம்சம் அதிகமாக காண்கின்றது. ஆவணி, புரட்டாசி மாதங்களில் மழைபெய்து பிறகு ஐப்பசி கார்த்திகை மாதங்கள் மழையின்றி கடுமையான சூரியவெப்பத்தால் பூமி சோஷிக்கும் காலத்தில் இவ்விஷாம்சம் உண்டாவதாக அனுபவத்தால் ஏற்படுகின்றது. இந்த விஷாம்சம் ஒரேவிதமாக இல்லாமல் பலவிதமாக இருப்பதால் அதனாலுண்டாகும் முறைகாய்ச்சலும் பலவிதமாகின்றது. இது மாத்திரமின்றி இதுபோன்ற காரணங்களால் உண்டாகும் பிளேக் முதலிய வியாதிகளும் பலவகைப்பட்டனவாகவேயிருக்கின்றன. சரீரத்தில் வியாபிக்கும் விஷத்தின் தாரதம்மியத்தையும் நோயாளியின் சரீரபலத்தையும் அனுசரித்து வியாதி பலவேற்றுமைகளை அடைகின்றது. ஆனால் ஒரு விஷயம் மனதிலிருத்தல் அவசியம். இம்முறை வியாதியில்லாத இடம் மிகவும் துர்லபமெனக்கூறலாம். சிற்சில இடங்களில் விசேஷித்து இவ்வியாதி நித்யவாசம் செய்கின்றது. மற்ற இடங்களில் அடிக்கடி தோன்றி மறைகின்றது. சிலருக்கு மலேரியா அல்லது விஷபூச்சிகள் சரீரத்தில் நுழைந்து ரக்தத்தில் கலந்து சிலருக்கு முறைகாய்ச்சல்களையும், சிலருக்கு விடா காய்ச்சலையும் உண்டுபண்ணுகின்றது. சில சமயங்களில் முறை காய்ச்சலாக ஆரம்பித்து சில நாட்களுள் விடாகாய்ச்சலாகவும் சிலருக்கு விடாகாய்ச்சலாக முதலில் ஆரம்பித்து பிறகு சிலதினங்களுள் முறைகாய்ச்சலாகவும் மாறுகின்றது. இப்படி வரும் காய்ச்சல்கள் வெகுகாலம் நீடித்தால் அவ்விஷாம்சம் spleen liver என்கிற கல்லீரல் மண்ணீரல்களை கெடுத்து அவைகளை பெருக்கச்செய்து தொந்திரவை உண்டுபண்ணுகின்றது. இவ்விஷாம்சம் வருஷக்கணக்காக சரீரத்தில் வியாதியை உண்டுபண்ணும். சிலசமயங்களில் வெளிக்கு காய்ச்சல் தெரியாமல் சிலருக்கு தலைவலியை உண்டுபண்ணுகின்றது. சிலருக்கு கல்லீரல் மண்ணீரல் இவைகளை இயற்கைக்கு அதி



கமாக பெருக்கச் செய்கின்றது. சிலகாலத்திற்கு முந்தி இது இங்கிலாந்தில் தொத்து வியாதியாக பரவியிருந்தது. இவ்வியாதி கொசுக்களாலேயே பரவுகின்றது. பலவித புழுக்களால் பலவித முறைகாய்ச்சல் உண்டானபோதிலும் அப்புழுக்கள் அநேகமாக ஒரே இனத்தைச் சேர்ந்தவைகளே. இவ்வியாதி மாதக்கணக்காக சரீரத்தில் வியாபித்த பிறகு வயிற்று குழியில் மிகுந்தவலி, வாந்தி, கண்மஞ்சளாதல், வயிறு கனத்தல், மார்பில்வலி, பசியின்மை, உடம்புவிசேஷித்து முகமும்மஞ்சளாதல், சிறுநீர்மஞ்சளாக இறங்குதல், கைகால் அசக்தி, இரண்டுவாரத்திற்கு ஒருதடவை இரண்டு அல்லது மூன்று நாள் காய்ச்சல் வீசுதல், இதுபோன்ற தொந்திரவு உண்டாகும்.

இவற்றுள் சததம் Remittent இதில் பகலில் ஒருதடவை காய்ச்சல் பலமாக வீசுவதும் ராத்திரி ஒருதடவை வேகமாக காய்ச்சல் வீசுவதும், அல்லது பகலில் இரண்டு தடவை ராத்திரி இரண்டு தடவை காய்ச்சல் வீசுவதும் குறியெனக் கொள்ளல் வேண்டும். இதில் உஷ்ணம் இயற்கையளவில் சமனமாவதும் உண்டு. அல்லது இயற்கை அளவுக்கு உஷ்ணம் தணியாமல் சற்று தணிந்திருந்து பிறகு வேகமாக வீசுவதும் உண்டு.

அன்யேத்யு:—தினம் பகலிலாவது அல்லது ராத்திரியிலாவது ஒருதடவை காய்ச்சல் அடித்து நிச்சேஷமாக பிறகு வியர்வையுண்டாகி தணிந்துவிடும்.

திருதீயகம்:—ஒரு நாள் பூர்ணமாக காய்ச்சல் இல்லாமலிருந்து மறுதினம் காய்ச்சல்வரும். இவ்விதமே ஒவ்வொரு நாள்விட்டு ஒவ்வொருநாள்வரும் சுரமே இதன் லக்ஷணமாகும். இதுவே மூன்றும் முறைகாய்ச்சலென அழைக்கப்படுகின்றது.

சதுர்த்தகம்:— ஒருநாள் காய்ச்சல் அடித்து இரண்டுநாள் பூர்ணமாக நின்று மறுநாள் காய்ச்சல் திரும்பிவரும். இதற்கு நான்காம் முறைகாய்ச்சலெனப்பெயர். இரண்டுநாள் விடாமல் காய்ச்சல் அடித்து பிறகு ஒருநாள் நின்று மறுபடியும் இரண்டு நாள் விடாமல் காய்ச்சல் வீசும். இந்த இரண்டும் நான்காம் முறைக்காய்ச்சலைச்சேர்ந்ததே. இதற்கு சதுர்த்தக விபர்யயமென வடமொழியில்கூறுவர்.

முறைகாய்ச்சல்களின் சிகித்சை :— முறைகாய்ச்சல்கள் பலவகைப்பட்டாலும் அவைகளின் சிகித்சையில் அதிகம் வித்தியாசமில்லை. குளிர் நடுக்கம் இவைகள் அதிகமாகவிருக்கும்பொழுது

பெரியபோர்வைகளை நோயாளிக்கு போடவேண்டும். ஒக்காளம் மிகுதியாக விருந்து வாந்தி எடுத்தாலல்லது சாத்தியமில்லை என்ற நிலையில் முன்காய்ச்சலுக்கு சொல்லிய வாந்தி கிஷாயத்தை உபயோகிக்கலாம். முறைகாய்ச்சல்களில் காய்ச்சல்வரும் முறைதினத்தன்று வாந்தி பேதி இவைகளுக்கு மருந்து கொடுக்கலாகாது. இவைகளை முறைதினத்தன்று உபயோகித்தால் காய்ச்சலின்கோமும் வேகமும் அதிகப்படும். தலைவலி சகிக்கமுடியாவிடில் ஒருதேவதாருகட்டையை சுண்டுவிரல் பெருமன் நாலு அங்குல நீளம் நறுக்கி எடுத்து நல்லெண்ணெயில் தோய்த்து அதன் நுனியில் நெருப்பைக்கொளுத்தி சற்று சாய்த்து ஒரு பாத்திரத்தில்பிடித்தால் அந்தஜ்வாலையிலிருந்து தைலம் பாத்திரத்தில் சொட்டு சொட்டாகவிழும். அந்த தைலம் ஆறின பிறகு நோயாளியின் மூக்கு துவாரங்களில் இரண்டு துளிகள் நஸ்யம்செய்தால் தலைவலிதணியும். தாளிசபத்திரி வடகத்தை வாயில் அடக்கிக்கொண்டு ரஸத்தை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கினால் வயிற்று சங்கடமும் வாந்தியும் குறையும். நோயாளிக்கு வியர்வையுண்டாக ஆரம்பித்தால் அந்த சமயத்தில் வெளிக்காற்று உடம்பில்படாமல் மூடிவைக்கவேண்டும் வியர்வையை வேறு வஸ்திரம் கொண்டு துடைக்கவேண்டும். வியர்வை அதிகம் உண்டாகாவிட்டால் கோரைக்கிழங்கு இரண்டுதோலா எடுத்து முன்போல கிஷாயம்செய்து சாப்பிடவேண்டும். வியர்வை அதிகப்படும். அந்த வியர்வை உண்டாகும் காலத்தில் நோயாளி படுக்கையைவிட்டு எழுந்திருக்கக்கூடாது. வியர்வைநின்று தெளிவு ஏற்பட்டபிறகே எழுந்து உட்காரவேண்டும். சிலர் முறைகாய்ச்சல் வந்தவுடன் குளிர்ந்த ஜலத்தில் சில நிமிஷம் அமிழ்ந்து ஸ்நாநம் செய்கிறார்கள். அதெல்லாம் அசாஸ்திரியம். சில சமயங்களில் ஆபத்தை விளைவிக்கும். காய்ச்சல் நின்றபிறகும் காய்ச்சல் விடும்பொழுதும் தணிக்கும் மருந்துகளை உபயோகிக்கலாம். மலபந்தமுமிருந்தும் நாக்கில் மாசு அதிகம் படிந்திருந்தும் அக்னி மந்தமும் ஏற்பட்டிருப்பின் மலம் கழிய பேதி மருந்துகளை உபயோகிக்கலாம். ஆனால் அம்மருந்துகள் காய்ச்சல் வாராத நாள்களிலேயே கொடுக்கவேண்டும். முன் சுரங்களில் சொல்லிய பேதி மருந்துகளை கொடுக்கலாம். இரண்டொரு முறை கழிந்தபிறகு பால் சேர்ந்த கஞ்சிகள் ஆகாரமாகக்கொடுக்கலாம். மாதக்கணக்காக இக்காய்ச்சலில் கஷ்டப்படும் சிலர் மனம்போனபடி ஆகாரம் உட்கொள்ளுகின்றனர் அது சில சமயங்களில் பாதகத்தை விளைவிக்கும். அனேகமாக இக்காய்ச்சலில் மாணம் நேருவதில்லையென்பது உண்மையே. ஆகிலும் சில கேசுகள் குணப்படாமலும் போவதால் பத்தியத்தைமீறி நடக்கலாகாது.



" விநாபி பேஷஜை: வ்யாதி: ஸ்வயமேவ நிவர்ததே
நது பத்ய விஹீநஸ்ய பேஷஜாநாம் சதைரபி "

" வியாதிகள் மருந்தின்றிதானாக காலக்கிரமத்தில் விலகலாம். ஆனால் பத்தியத்தை கவனித்து ஒழுங்காக உட்கொள்ளல்வேண்டும். அமிருதம் போன்ற ஆயிரக்கணக்கான மருந்துகொடுத்தபோதிலும் பத்தியத்தைகவனித்து அனுசரிக்காவிடில் வியாதிநிவர்த்தியாகாது" ஆகையால் முறைக்காய்ச்சல்தானென்று அலக்ஷியம் செய்யாமல் பத்தியவிதிகளை அனுசரிக்கவேண்டும். பசி மிகுந்திருந்து காய்ச்சலும் அதிக கடுமையாக இல்லாவிடில் கொஞ்சமாக அன்னத்தையும் உட்கொள்ளலாம்.

முறைசுரங்களுக்கு மருந்து:— சுதேச வைத்திய முறையில் வெள்ளைபாஷாணத்திற்கு சமமாக முறைசுரங்களுக்கு வேறுஔஷதம்கிடையாதெனவே சொல்லக்கூடும். தனியாக வெள்ளை பாஷாண பஸ்மத்தை தேனில் குழைத்து தினம் இருவேளை காலை மாலை கொடுத்துவரலாம். அல்லது வெள்ளைபாஷாணம் சம்பந்தப்பட்ட மருந்துகளை கொடுக்கலாம். ஆங்கிலத்திலும் குவைனுவுக்கு அடுத்தபடியாக வெள்ளைபாஷாணம் போற்றப்படுகிறது. சுதர்சன சூர்ணத்தை முன்சொல்லிய விதிப்படி இதற்கும் கொடுக்கலாம். மிருத்யுஞ்சய ரசமும் நல்லது.

முறைசுரங்களுக்கு மருந்து :— வெள்ளைபாஷாணம், மிளகு, லிங்கம், இவைகளை சமனிடையாக எடுத்து கல்வத்திலிட்டு மிதி பாகலிலைச்சாற்றால் நான்குஜாமம் (பனிரெண்டுமணி) அரைத்து மிளகுபோல மாத்திரை உருட்டி நிழலில் காயவைத்து சீசாவில் இட்டுக்கொள்ளவும். சர்வ சுரங்களுக்கும் சொல்லிய கஷாயம் அல்லது இஞ்சிரசம் இவைகளின் அனுபானத்தில் தினம் காலை சாயங்காலம் ஆகிய இரண்டுவேளைகளிலும் ஒரு மாத்திரை உட்கொள்ளலாம்.

குறிப்பு:—வெள்ளை பாஷாணத்தை ஒரே கட்டியாக கடையில் வாங்கி அதை ஒரு துணியில் முடிந்து வண்ணான் வெள்ளாவியில் ஒரு நாள் வேகவைத்து எடுத்து நன்றாக கழுவி வைத்துக்கொள்ளவும். சுத்தியாகும். லிங்கத்தை மிருத்யுஞ்சய ரசத்தில் சொல்லிய விதம் சுத்திசெய்து கொள்ளவும். மிதிபாகல் கொடியை சமூலம் கொண்டுவந்து ஜலம் விடாமல் இடித்து ரஸம் பிழிந்து கொள்ளவும் முதலில் மிளகை கல்வத்திலிட்டு நன்றாக பொடிசெய்து கொண்டு பிறகு லிங்கத்தைப் போட்டு நன்றாக அரைத்து பிறகு ரசம் விட்

ரைக்கவும். அதன்பிறகு வெள்ளை பாஷாணத்தையும் சேர்த்து ரசம்விட்டரைக்க வேண்டும். சொல்லிய விதமாக பனிரெண்டுமணி அரைக்கவேண்டும். கணக்குப்படி அரைத்தால்தான் சாமான்கள் ஒன்றோடொன்று நன்றாககலக்கும். ஆகையால் அரைப்பு விஷயத்தில் வைத்தியர்கள் அலக்ஷியம் செய்யக்கூடாது. இம்முறையில் சுத்திசெய்த பாஷாணத்திற்கு பதிலாக பாஷாண பஸ்மத்தைச்சேர்த்துக்கொள்ளலாம். அவ்விதம் செய்தால் அது மிகுந்த நன்மையை உண்டுபண்ணும்.

முறை சுரங்களுக்கு மருந்து:— தும்பைச்செடி சமூலம் இடித்துப் பிழிந்த ரசம் அரை அவுன்சில் கால்ரூபாயிடை மிளகுபொடியைப் போட்டு கலக்கி காலையிலும் மாலையிலும் தினம் இரண்டு வேளை சாப்பிடவும்.

குறிப்பு:— முறை சுரங்களில் சிலர் பச்சிலை கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அதில் பல நம்பக்கூடியவைகளல்ல. உதாரணமாக சிலர் எருக்கம் மொக்கை சுவல்ப மிளகு சேர்த்து அரைத்து ஒரு உருண்டை ரகசியமாக கொடுக்கின்றார்கள். இதனால் பலருக்கு மிக ஆபத்து உண்டாவதைப் பார்த்திருக்கிறோம். மற்றும் சிலர் குப்பை மேனியை கொடுப்பதுமுண்டு. இதுபோன்ற கொடிய மூலிகைகளை கொடுப்பதால் பல தீங்குநேரிடக்கூடுமாதலால் அவைகளை உபயோகியாமலிருப்பதே நலம்.

தாளிசபத்திரி வடகம் :—

தாளிசபத்திரி பலம் 1, ( பலம் என்பது மூன்று தோலா ) மிளகு பலம் 2, சுக்குபலம் 3, திப்பிலி பலம் 4, மூங்கிலுப்பு பலம் 5, சிறு ஏலம் பலம் அரை, லவங்கப்பட்டை பலம் அரை, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து கொண்டு நாலு பங்கு அதாவது 64 பலம் ஜீனியை பாகுவைத்து அதில் இந்த பொடியைத்தூவி வடகமாகச்செய்துகொள்ளவும்.

குறிப்பு— இவ்விடத்தில் இரண்டு பங்குஜீனி சாஸ்திரங்களில் சொல்லப்பட்டாலும் நாலுபங்கு ஜீனியை காசிமுதலிய இடங்களில் பண்டிதர்கள் கலக்கின்றனர். ஜீனி இரண்டு பங்கு சேர்த்தால் மருந்து அதிககாரமாக இருக்கின்றது. அவசியமானால் இரண்டு பங்கு ஜீனியையும் சேர்க்கலாம். ஜீனியை பாகுவைத்து பிறகு பொடியை தூவி கலந்த பிறகு ஒரு தாம்பாளத்தில் அதைப்போட்டு அடைபோல்தட்டி உடனே கத்தியால்கீறிவிட்டால்சிறியதுண்டுகளாகும்.

2/0148

# வைத்திய சந்திரிகாவைப்பற்றி

## சில பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

---

தாய்நாடு கூறுவதின் சுருக்கமாவது :— வைத்திய சந்திரிகாவில் அரிய விஷயங்கள் பல மலிந்து கிடக்கின்றன. ஆசிரியரின் அரிய திறமை இவ்வியாசங்கள் மூலம் நன்கு தெரியவருகின்றது. ஆசிரியர் அவர்கள் ஆயுர்வேத வைத்தியத்தில் நிபுணரென்பதையும் பொது விஷயங்களில் மிக்க சிரத்தை வாய்ந்துள்ளவரென்பதையும் இவ்வியாசங்களும் பத்திரிகையும் நன்கு எடுத்து காட்டுகின்றன. வைத்திய சந்திரிகா ஆயுர்வேத வைத்தியத்தின் மகிமையை நன்கு விளக்கிக்காட்ட முற்பட்டிருக்கிறது. கற்றவர்யாவரும் வாசிக்கவேண்டிய வியாசங்கள் இவைகளாகும். தமிழர் இப்பத்திரிகையை ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். குரோதன-௵ ஆனி-௴ 23-௳

தமிழ்நாடு கூறுவதின் சுருக்கம் :— சுதேசீ வைத்திய முறையாகிய ஆயுர்வேதத்தின் நன்மைகளை ஜனங்களுக்குப் புகட்டிப் பரப்புவதற்கும் மற்ற வைத்திய முறையைவிட உண்டான குணநிசயங்களை எடுத்துக்காட்டவும், இது சாஸ்திரீயமானதல்லவென்றும் ஆராய்ச்சிசெய்து ஏற்பட்டதல்லவென்றும் சொல்லுவோர்க்கு பதில் அளிப்பதற்கும், ஏற்பட்ட ஓர் பத்திரிகை.

குரோதன-௵ ஆவணி-௴ 1-௳

தமிழ்ப்பொழில் கூறுவதின் சுருக்கம் :— வைத்திய சந்திரிகா நமது நாட்டில் நிகழும் தமிழ் மருத்துவமுறை வடமொழி மருத்துவமுறை முதலிய நாட்டு மருத்துவ முறைகளைப்போற்ற முன்வந்திருப்பதாகும். திருவள்ளுவரும் மருந்தும், தமிழ் வைத்தியம் என்ற தலைப்புகள் பத்திராதிபருக்கு தமிழ் மருத்துவத்திலுள்ள அன்பைக்காட்டுகின்றன.